பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 231

புதன்பொய்கை

புதன்கிழமை
15 ஜூலை 2026

ஆனி 31 ஆம் நாள்
வர் ஆண்டு 2057

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு

# நீதியை நிலைநாட்டுவதில் இலங்கை படுதோல்வி!



**ஜஸ்மின் சூக்கா குற்றச்சாட்டு**

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் நீதியை நிலைநாட்டுவதிலும், உண்மைகளைக் கண்டறிவதிலும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் திட்டமிட்ட முறையில் தோல்வியடைந்துள்ளன என்று சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் வெளியிட்ட அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

»15

## புதிய கூட்டணியை உருவாக்க எமக்கு எந்த அவசியமுமில்லை!

*அரசு தரப்பு தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 15
"ஆளுங்கட்சியின் பக்கம் 159 எம்.பி.க்கள் உள்ளனர். எனவே, புதிய கூட்டணிகளை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு அரசாங்கத்துக்குக் கிடையாது" என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல்

»14

வடக்கு – கிழக்கில்

## ஒருதலைப்பட்சமாக செயற்படக்கூடாது!

*தொல்லியல் திணைக்களத்திடம் தமிழரசுக்கட்சி கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 15
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் முன்னெடுத்து வரும் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, அனைத்துத் தரப்பினரும்

»15

## பூநகரியில் விபத்து இளைஞன் சாவு!



கிளிநொச்சி, ஜூலை 15
கிளிநொச்சி - பூநகரி ஏ-32 வீதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இடம் பெற்ற வீதி விபத்தில்.

»15

*காரைநகரில்*

## வீடுகளில் திருட்டு; இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 15
வெளிநாட்டிலிருந்து வந்து காரைநகரில் தங்கியுள்

»15

## பொய்!

கொழும்பு, ஜூலை 15
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பிரான்ஸுக்கான உத்தியோக பூர்வவிஜயம் விஸா பிரச்

»14

*செம்மணிப் புதைகுழி;*

## மீண்டும் இன்றுமுதல் அகழ்வுப் பணிகள்!

விரிவு பக்கம்:-15

*முல்லைத்தீவு பாடசாலையில்*

## மாணவர்களுக்குள் முரண்பாடு; இரும்புக்கம்பியால் தாக்குதல்!

*இரு மாணவர்கள் காயம்
மூவருக்கு விளக்கமறியல்*

முல்லைத்தீவு, ஜூலை 15
முல்லைத்தீவில் உள்ள பாடசாலையொன்றில் சக மாணவர்கள் மீது இரும்புக்கம்பியால் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்திய அதே பாடசாலையைச் சேர்ந்த உயர்தர மாணவர்கள் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறிய

»14

## கூட்டணியல்ல; குட்டிச்சுவர்!

அமைச்சர் சந்திரசேகர் வியாக்கியானம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
'எத்தனை கூட்டணிகளை அமைத்தாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அசைக்க முடியாது. இந்த ஆறு கட்சிகளும் அமைத்துள்

»15

## மூதாட்டியின் சங்கிலி அறுப்பு



யாழ்ப்பாணம்,ஜூலை 15
மோட்டார்சைக்கிளில் பின்பக்கமாக அமர்ந்துவந்த மூதாட்டியின் இரண்டரைப் பவுண்

»14

## கிஷோரின் பதவி நீக்க வழக்கு; ஆளுநர் தரப்புக்கு நீதிமன்றம் கெடு!

யாழ்ப்பாணம், ஜூலை 15
சாவகச்சேரி நகராட்சி மன்ற முன்னாள் உப தவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோர் தாக்கல்செய்த வழக்கில், எதிர்மனுதாரர்கள் ஜூலை 17 ஆம் திகதி தமது ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வு உத்தரவிட்டுள்ளது.
கடந்த 19.06.2026 ஆம் நாளிட்டு 24.06.2026 அன்று

»14

*சாவகச்சேரி நகரசபையில்*

## எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய உபதவிசாளர் தெரிவு!

யாழ்ப்பாணம், ஜூலை 15
சாவகச்சேரி நகரசபைக்கான புதிய உப தவிசாளரைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி

»15

முச்சந்தி முராரி

"முறிச்சு வளர்க்கிறது முருங்கைக்கு மட்டுமில்ல உந்தப் பள்ளிக்கூட ரவுடியளுக்கும் நல்லம் கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4490 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 12 24 44 80 |
| விசேட எழுத்து | V |

| ஹந்தஹஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1557 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 27 40 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0516 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 3 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2596 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 10 46 52 55 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6248 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 7 3 0 8 3 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2278 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 03 21 35 48 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0364 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 06 08 11 |

# முதலாம் தர சேர்க்கைச் சுற்றறிக்கை பழைய சுற்றறிக்கைக்கு சாயம்பூசலே

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜூலை 15

**பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கை, கடந்த ஆண்டின் சுற்றறிக்கையின் ஒரு சில வார்த்தைகளை மாற்றிவிட்டு அதே சுற்றறிக்கையையே மீண்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.**

இதனால் நாட்டின் கல்வித்துறையில் நெருக்கடிகளையும், சவால்களையும் ஏற்படுத்தியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெரண்டோ தெரிவிக்கையில்,

நாட்டில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசாங்கம் விளம்பரப்படுத்தி வரும் நிலையில் நடைமுறையில் கல்வி அமைச்சு அதற்கு நேர்மறையாகவே செயற்பட்டு வருகிறது.

கல்வி அமைச்சு கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட 25ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஒரு சில வார்த்தைகளைப் பெயரளவில் மாற்றிவிட்டு அதே சுற்றறிக்கையை மீண்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

அரசப் பாடசாலைகளின் தரம் மற்றும் திட்டமிடல் குறைபாடுகளால் பெற்றோர் தனியார் பாடசாலைகளை நோக்கிச் செல்கிறார்கள்.

அதாவது தற்போதைய சுற்றறிக்கையின்பின்னணியில் தனியார் கல்வியை மேலும் ஊக்குவித்து அரசாங்கத்தின் இலாபம் ஈட்டும் மறைமுக நிகழ்ச்சிநிரல் உள்ளதோ என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே இந்த முறையற்ற சுற்றறிக்கையால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0956 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 9 2 4 1 5 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3222 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 15 66 71 72 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 05 15 30 34 |
| வெற்றி வாரம் | 5383 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 1052 |
| வெற்றி இலக்கம் | 08 15 40 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| | விருச்சிகம் |
| வெற்றி இலக்கம் | 19 30 50 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4934 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 10 13 55 72 |
| வெற்றி வாரம் | 2398 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 14.07.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 13 66 67 74 |
| வெற்றி வாரம் | 3048 |

## கப்ரால் மீதான வழக்குக்கு நீதிமன்றம் பச்சைக்கொடி

கொழும்பு,ஜூலை 15

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலஞ்ச ஊழல் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவித்து, பிரதிவாதி தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்ற நிரந்தர மூவரடங்கிய நீதியரசர்கள் நிராகரித்து உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த 2011 மார்ச் 11 முதல் 2012 நவம்பர் 19 வரையான காலப்பகுதிக்குள், கிரீஸ் நாடு கடுமையான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அந்நாட்டின் பிணைமுறிவுகளில் இலங்கை அரசாங்கத்தின் பணத்தை முதலீடு செய்ததன் மூலம், அரசுக்கு 184 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழேயே அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு சட்ட வரம்புக்குட்பட்ட அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து கப்ரால் தரப்பு ஆரம்பகட்ட ஆட்சேபனையைத் தாக்கல் செய்தது. இந்நிலையில் பிரதிவாதி கப்ரால் தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனைகளில் எவ்வித அடிப்படையும் இல்லை எனக் கூறி அதனை நீதிமன்றம் ஒருமனதாக நிராகரித்தது. அத்துடன், இந்த நிதி மோசடி வழக்கின் முழுமையான விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதி ஆரம்பிப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு!




கொழும்பு.ஜூலை 15

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் ஐந்து பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள பிள்ளையான் என்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் ரி-56 ரக துப்பாக்கிகளால் ஐந்து நபர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட இரு சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்.ஜூலை 15

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் சந்திப் பகுதியில் போதைமாத்திரைகளுடன் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குப்பிழான் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதாகியுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த அச்சுவேலிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)



## இலங்கை உணவுகளுக்கு சர்வதேசத்தில் அங்கீகாரம்

கொழும்பு,ஜூலை 15

2026ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த 50 உணவுகளுக்கான சுற்றுலாத் தலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை முதல் முறையாக இடம்பிடித்து சர்வதேச அரங்கில் பெருமை சேர்த்துள்ளது. சர்வதேச அளவில் புகழ்பெற்ற 'டிராவல் அண்ட் டூர் வேர்ல்ட்' நிறுவனம் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் கடுமையான போட்டிக்கு மத்தியில் தயாரிக்கப்பட்ட இந்தத் தரவரிசையில், மெக்சிகோ முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், இத்தாலி இரண்டாம் இடத்தையும், ஸ்பெயின் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இந்தப் பட்டியலில் இலங்கை 50 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஐரோப்பா, ஆசிய-பசிபிக் பிராந்தியம், அமெரிக்கா, கரீபியன், ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு உள்ளிட்ட உலகப் புகழ்பெற்ற பல முன்னணி உணவு சுற்றுலாத்தலங்களுடன் போட்டியிட்டே இலங்கை இந்த இடத்தைப் பெற்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# விசர்நாய்க்கடியை ஒழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஜூலை 15

**சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து 2030ஆம் ஆண்டுக்குள் இலங்கையிலிருந்து விசர்நாய்க்கடியை முற்றாக ஒழிப்பதற்கான தேசியத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சஞ்சிகா பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி நாய்கள் மீது அன்பு செலுத்துபவர்கள் அவற்றுக்கு வெறும் உணவை மட்டும் வழங்கிவிட்டுச் செல்லாமல், அந்த விலங்குகளின் முழுமையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக் குறித்துப் பொறுப்பேற்க வேண்டும். முறையான பொறுப்பின்றி வீதி நாய்களுக்குப் பொது இடங்களில் உணவளிப்பது, நாட்டில் விசர்நாய்க்கடி ஆபத்தை மேலும் தீவிரமாக்கும். 1973ஆம் ஆண்டிலேயே விசர்நாய்க்கடிக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில், நாட்டில் வெறிநாய்க்கடி காரணமாக ஆண்டுக்குச் சுமார் 360க்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகின. கடந்த சில தசாப்தங்களாக மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்பட்ட தீவிர தடுப்பூசித் திட்டங்கள் காரணமாக, தற்போது இந்த மரணங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 14 ஆகக் குறைந்துள்ளது. எனினும் நாய்க் கடிகள் தினசரி மிக அதிகளவில் ஏற்படுவதால் இது இன்னும் ஒரு தீவிரமான பிரச்சினையாகவே உள்ளது. மருத்துவமனைகளில் வழங்கப்படும் விலையுயர்ந்த தடுப்பூசிகள் மனித உயிர்களைக் காப்பாற்றினாலும், அவை இலங்கை அரசாங்கத்தின் சுகாதாரத் துறைக்குக் கடுமையான நிதிச்சுமையை ஏற்படுத்துகின்றன. எனவே, மனிதர்களுக்குச் சிகிச்சை அளிப்பதை விட, விசர் நாய்களை முற்றாக ஒழிப்பதே நிதிச்சுமையிலிருந்து அரசாங்கத்தை விடுவிப்பதற்கான ஒரே நிரந்தரத் தீர்வாகும் - என்றார். (ச-இ)

## முல்லைத்தீவில் நெல்கொள்வனவு

முல்லைத்தீவு, ஜூலை 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவுக்கான ஆரம்பகட்டச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைவாக இன்று முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளிடம் நெல் மாதிரிகள் பெறப்பட்டு, நெல்லின் ஈரப்பதனை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலைகளில் தேங்கியிருக்கின்ற நெல்லை, உரிய வகையில் அகற்றும் செயற்பாடுகளும் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-246)



## அமிர்தலிங்கத்தின் 37ஆவது நினைவேந்தல்

கிளிநொச்சி, ஜூலை 15

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு, கிளிநொச்சியிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணிக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அமிர்தலிங்கத்தின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-113,55)



## சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களுடன் கட்டைக்காட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி சுருக்குவலைகள், இழுவைப்படகு இயந்திரம் ஆகியவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மருதங்கேணிப் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின்போது கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபர் கைதானார். கைது செய்யப்பட்டவரை சான்றுப் பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (80)

## தவிசாளர் வின்சென் டில்லிக்குப் பயணம்

புதுடில்லி, ஜூலை 15

புதுடில்லியில் நடைபெறும் சர்வதேச செயலமர்வில் பங்கேற்பதற்காக, பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பயணித்துள்ளார்.

தேசிய சிறுதொழில் அபிவிருத்தி நிறுவனம் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்தச் செயலமர்வுக்கு, இலங்கையிலிருந்து 30 இளம் அரசியல் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பதில் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கு உப தவிசாளர் தே.தேவராஜேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (க-1[illegible])

## பிச்சைப் பாத்திரம் ஏந்தி...-2

யாசகம் எடுக்கேக்க அப்பாவியளா முகத்தை வைச்சுக்கொண்டு காசு வாங்கிற வையைப் பின்னேரத்துக்குப் பிறகு பாத்தியள் எண்டா, அவை அந்நியன் மாதிரி மாறி நிப்பினம். இவையளிட்ட காசு சேர்ந்த பிறகு மத்தியானம் சாப்பிட மறந்தாலும், 'பார்' பக்கம் போக மறக்காயினம். இதில அவையளிட்ட ஆண், பெண் எண்ட பேதமெல்லாம் இல்லை. சேர்ந்த காசுக்கு எவ்வளவு குடிக்க ஏலுமோ அவ்வளவுக்கு குடிச்சுப் போட்டுத்தான் அடுத்த ரவுண்ட் யாசகத்துக்கு வெளிக்கிடுவினம்.

இதில கொஞ்சம் வசதியான யாசகக்காரர் எங்கையாவது ஆக்கள் இல்லாத குச்சொழுங்கையளுக்க ஒதுங்குவினம், அவைக்கு உந்தச் சாராயமெல்லாம் சரிவராது. எங்கையாவது போதைப் பொருள் வாங்கியந்து ஒரு இழுவை இழுத்துப்போட்டு, கண்ணெல்லாம் சொருகினபடி 'சோம்பியள்' மாதிரி திரிவினம். அதுக்குப் பிறகு அவையின்ர உலகமே வேற. கண்ணில் அம்பிடுற எல்லாரிட்டையும் காசு கேட்டு ஆய்க்கினைப் படுத்துவினம். காசு குடுக்காட்டி ஆக்களைப் பிடிச்சு இழுக்கிறது, காலைப் பிடிக்கிறது எண்டு எல்லைமீறி நடப்பினம். அதுவும் வெளிநாட்டுக்காரர், வெள்ளைக்காரரிட்டத்தான் இப்பிடியான சேட்டையளை விடுவினம். இதால யாசகக்காரரைக் கண்டாலே ஏதோ அனுகுண்டைக் கண்டமாதிரி தலைதெறிக்க சனங்கள் ஓடுற நிலைமை வந்திட்டுது. பள்ளிக்கூடப் பிள்ளையள், ரியூசன் முடிஞ்சு வீட்ட போற பிள்ளையள், வேலை முடிஞ்சு போற பொம்பிளையளிட்ட இவையின்ர அத்துமீறல் இன்னும் கூடவாம். இதையெல்லாம் கனநாள் பாத்துக்கொண்டிருந்திட்டுத்தான் இப்ப வடக்கு மாகாண சுற்றுலாத்துறைக்காரர் இந்த யாசகக்காரரையெல்லாம் தேடித் தேடிப் பிடிச்சுக் கொண்டிருக்கினம்.

இப்பிடி பிடிபடுறவையை அப்பிடியே அம்போ எண்டு நடுக்காட்டில கொண்டுபோய் அவை விடுறேலை. அவைக்கெண்டு புனர்வாழ்வு குடுத்து ஒரு வேலையைப் பழக்கி, அவையை உழைச்சு சம்பாதிக்கிற மாதிரி ஏற்பாடுகளையும் அதுக்குரிய அதிகாரிமார் செய்யினமாம். அதைவிட வேற சில பிரச்சினையளும் அவைக்கு இருக்கும் தானே. குடும்பப்பிரச்சினை, மருத்துவத்தேவை, தங்குமிடம் எண்டு அவையளுக்கு இருக்கிற பிரச்சினையளைக் கேட்டறியினமாம். அதைவிட மனநலம் பாதிக்கப்பட்டவையை அதுக்குரிய ஆஸ்பத்திரியளில சேர்க்கவும் நடவடிக்கை எடுத்திருக்கினம். இப்பிடி அவைக்கு இருக்கக்கூடிய பிரச்சினையளில தீர்க்கக் கூடியதுகளைத் தீர்த்து இனிமேல் அவை யாசகம் எடுக்காத நிலையை உருவாக்குகினம் எண்டும் சொல்லுப்படுகுது, ஆனால் உழைக்காமல் சும்மா கையேந்தி வயிறு வளர்த்த கனபேருக்கு உழைச்சு சம்பாதிக்கிறதெண்டால் வேப்பங்காய் மாதிரிக் கசக்கும் தானே. இப்பிடி அவையை பிடிச்சாலும் பிறகு கொஞ்ச நாளில திரும்ப வரவும் கூடும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பில் சமூக வலுவூட்டல் திட்டத்தை ஆரம்பித்த டேவிட் பீரிஸ் குழுமம்

சமூக மேம்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூக முன்னேற்றத்துக்கான தமது நீண்டகால அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், டேவிட் பீரிஸ் குழுமம் (David Pieris Group) 5 நாள்கள் 'சமூக வலுவூட்டல் திட்டம் மட்டக்களப்பு' எனும் பரந்த சமூக நலன்புரித் திட்டத்தை 2026 ஜூலை 15ஆம் திகதிமுதல்19ஆம்திகதி வரை முன்னெடுக்கவுள்ளது.

இந்நிகழ்ச்சியானது மட்டக்களப்பு, திருகோணமலை வீதியில் அமைந்துள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (DPMC) நிறுவனத்துக்குச் சொந்தமான வளாகத்தை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளதுடன், மேலும் பல செயற்பாடுகள் நகரின் ஏனைய இடங்களிலும் இடம்பெறவுள்ளன.

ஒரு முழுமையான சமூக வலுவூட்டல் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டம், தொழில்முனைவோருக்கு ஆதரவளித்தல், வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்தல், தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத் திறன்களை ஊக்குவித்தல், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக உதவித் திட்டங்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டுதல், சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முக்கியமான விடயங்களில் ஒன்றாக 5 நாள்கள் வர்த்தகக் கண்காட்சி (Trade Fair) இடம்பெறவுள்ளது. இது ஜூலை 15-19 வரை DPMC வளாகத்தில் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதில் கலந்துகொள்ளும் பார்வையாளர்கள் David Pieris Motor Company, Assetline Finance, David Pieris Automobiles, David Pieris eMobility, David Pieris Solar Energy, David Pieris Logistics, Assetline Insurance Brokers, David Pieris Leisure, David Pieris Aviation உள்ளிட்ட டேவிட் பீரிஸ் குழுமத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்புகள், சேவைகள், நேரடி விளக்கக்காட்சிகள், அனுபவங்கள் மற்றும் பிரத்தியேக ஊக்குவிப்புச் சலுகைகளை ஆராய்ந்து அறிவதற்கான வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

இதனுடன் இணைந்து, East Lagoon ஹோட்டலில் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் நடத்தப்படும். இங்கு, வளரும் தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிக உரிமையாளர்களுக்கு, அவர்களின் வணிகங்களை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் மதிப்புமிக்க அறிவும் நடைமுறை வழிகாட்டுதலும் வழங்கப்படும். அத்துடன் DPMC வளாகத்தில் பெண்கள் மேம்பாட்டுத் திட்டமும் இடம்பெறவுள்ளது. இது, அழகுக்கலைத் துறையில் பெண்களுக்கு நடைமுறை அறிவையும் திறன்களையும் வழங்குவதன் மூலம் அவர்களை மேம்படுத்துவதோடு, பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளையும் ஊக்குவிக்கும்.

ஜூலை 16 அன்று, திருகோணமலை வீதியில் உள்ள DPMC வளாகத்தின் முன்பாக வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்படும். இது பொறுப்பான சாலை நடத்தை மற்றும் பாதுகாப்பான பயணப் பழக்கவழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஜூலை 18 அன்று, 'பஜாஜ் தினம்' கொண்டாடப்படும். அன்றைய தினம் DPMC வளாகத்தில் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கான போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சியானது, பாதுகாப்பான பயணப் பழக்கவழக்கங்களையும் பொறுப்பான வீதிப்பயன்பாட்டையும் ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும். மேலும், உள்ளூர் வாகனப் பழுதுபார்க்கும் மெக்கானிக்குகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சித் திட்டமானது, அவர்களின் தொழில்முறைத் திறன்களையும் சேவைத் தரங்களையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவையும் நடைமுறை வழிகாட்டுதலையும் வழங்கும்.

நிகழ்ச்சியின் இறுதிநாளான ஜூலை 19 அன்று, கல்லடி, புதிய கல்முனை வீதி, சிவானந்த தேசியப் பாடசாலை மைதானத்தில் விளையாட்டு மற்றும் சமூகப் பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் கிரிக்கெட் போட்டியும் மற்றும் வாழைச்சேனையில் கால்பந்துப் போட்டியும் நடைபெறும். அதேநேரத்தில், DPMC முகவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேலும் வலுப்படுத்துவதற்காக, DPMC வளாகத்தில் அவர்களுக்கான இயந்திரவியல் பயிற்சித்திட்டம் நடத்தப்படும்.

இவை தவிர, இக்காலகட்டத்தில் பாடசாலை மேம்பாட்டுத் திட்டங்கள், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், வாகன தர நிலை மற்றும் புகைப்பரிசோதனை (Bajaj & KTM), பசுமைக் காலநிலை நடவடிக்கைத் திட்டம் மற்றும் பல்கலைக்கழக உள்ளகப் பயிற்சி வலுவூட்டல் திட்டம் ஆகியவையும் நடத்தப்படும்.

இந்த சமூக வலுவூட்டல் திட்டமானது, சமூகங்களில் முதலீடு செய்வதன் மூலம் வணிகச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையான மதிப்பை உருவாக்கும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கிறது. சிறந்த அர்த்தமுள்ள கூட்டாண்மைகள் மற்றும் முயற்சிகள் மூலம், DPMC குழுமம் இலங்கையின் நீண்டகால சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்களித்து வருகிறது, மேலும் நாடு முழுவதும் உள்ள சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 0777 445 610 அல்லது 0778 675 439 ஆகிய தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும் அல்லது https://web.facebook.com/davidpierisgroup டேவிட் பீரிஸ் குழுமத்தின் Facebook பக்கத்தைப் பார்வையிடவும்.

DPMC MEMBER OF David Pieris Group of Companies

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம்.

**இடபம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிகப்படியான செலவும் அலைச்சலும் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரசாங்கவகையில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஒருவழியாக அனுகூலமாக முடிந்துவிடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். தாயாருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். அவர் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**துலாம்:** முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடவும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** பிற்பகலுக்குமேல் அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பணத்தை செலவு செய்யும்போது அவசியமான செலவுதானா என்று யோசித்துச் செய்வது நல்லது.

**மகரம்:** கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும்.

**மீனம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். ஆனால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தந்தையாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# கானல்நீர் கூட்டணி!

புதிய அரசியலமைப்பு உருவாக்கம், காணிகள் மீதான உரிமை மற்றும் மாகாணசபைத் தேர்தல் போன்ற சிறுபான்மையினரின் பொதுப் பிரச்சினைகளுக்காக ஆறு தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஓரணியில் இணைந்து கூட்டுச் செயற்பாட்டை முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கின்றன. இந்தப் புதிய கூட்டணி ஒருபுறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் பலத்த சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது. இந்த இணைவு தேர்தல் நோக்கங்களுக்கானது அல்ல என்றும், சிறுபான்மையினரின் நலன்களுக்கானது என்றும் கட்சிகளின் தலைவர்கள் முழக்கமிட்டாலும், கடந்த கால கசப்பான வரலாற்றுப் பாடங்களை அறிந்த எமது மக்களுக்கு இந்தக் கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் வெறும் கண்துடைப்பாகவே தெரிகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் முதல் மலையகத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் வரை தமக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கமுடியாத தலைவர்கள், இன்று எத்தகைய 'பொதுக்கொள்கையின்' கீழ் கைகோர்க்கப் போகிறார்கள் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும்.

இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன் என இந்தக் கூட்டில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் சாதாரணமானவர்கள் அல்லர். இவர்களில் பலர் கடந்த காலப் பேரினவாத அரசாங்கங்களின் கீழ் மீள்குடியேற்றம், நீதி அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு, கிராமப்புற பொருளாதார அபிவிருத்தி எனப் பலம் வாய்ந்த அமைச்சுகளை அலங்கரித்தவர்கள். தாங்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது காணிவிடுவிப்பு, அதிகாரப்பகிர்வு போன்ற கோரிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கோ எவ்வித உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்காத இந்தத் தலைவர்கள், இன்று எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்தவுடன் சிறுபான்மையினரின் காவலர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முற்படுவது வேடிக்கையானது.

அரசாங்கத்தை எதிர்ப்பதற்காகவோ அல்லது தங்களின் சரிந்துபோன அரசியல் செல்வாக்கை மீட்டெடுப்பதற்காகவோ தற்காலிகக் கூட்டணிகளை அமைப்பது தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களை மீண்டும் ஏமாற்றும் செயலாகவே முடியும். உண்மையான கூட்டுச் செயற்பாடு என்பது மேடைப் பிரகடனங்களில் இல்லை, அது பரஸ்பர விட்டுக்கொடுப்புகளிலேயே தங்கியுள்ளது. உதாரணமாக, தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத் தரம் உயர்வு விடயத்துக்கு முஸ்லிம் தரப்பிலிருந்தே முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன. அதேபோல, மலையக மக்களின் காணி உரிமைப் போராட்டங்களில் ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் காட்டும் அக்கறை மிகக் குறைவேயாகும். இத்தகைய உள்வீட்டு முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளாமல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லாத நிலையில் உருவாக்கப்படும் இத்தகைய கூட்டணிகள், அத்திவாரமில்லாத கோட்டைகளைப் போன்றவையாகும்.

ஒரு கொள்கைக் கூட்டணிக்கு அசைக்க முடியாத பொதுக் கோட்பாடுகளும் நேர்மையும் அவசியமாகும். சிறுபான்மை மக்களின் தனித்துவமான அரசியல் அபிலாஷைகளை மதிக்காமல், வெறுமனே கொழும்பின் திசைகாட்டி அரசாங்கத்தை அச்சுறுத்துவதற்காக மட்டும் தற்காலிகமாக ஒட்ட வைக்கப்படும் இத்தகைய செயற்கைக் கூட்டணிகளால் மக்களுக்கு எவ்வித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை. இனியும் வெற்று வாக்குறுதிகளையும், போலி இணக்கப்பாடுகளையும் நம்பி ஏமாறுவதற்குச் சிறுபான்மை மக்கள் தயாராக இல்லை. எனவே, இந்த ஆறு கட்சிகளும் தங்களின் கடந்த காலத் தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக, தமக்கிடையேயான முரண்பாடுகளை முதலில் பேசித் தீர்த்துக்கொண்டு, ஒரு தெளிவான பொதுக் கொள்கை வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின், இந்தக் கூட்டணியும் வழக்கம் போலத் தேர்தலுக்கு முன்னதாகவே உடைந்து சிதறும் மற்றுமொரு கானல் நீராகவே வரலாற்றில் எஞ்சியிருக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்**

**பொருள்:** அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார்.




# பயணிகள் போக்குவரத்துக்கு ட்ரோன் விமானச் சேவை!

அரசாங்கம் பரிசீலிப்பு

**கொழும்பு,ஜூலை 15**
**நாட்டின் வான்வழிப் போக்குவரத்துத் துறையை நவீனமயமாக்கும் நடவடிக்கையாக, பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய ட்ரோன் விமானச் சேவையை சோதனை முறையில் அறிமுகப்படுத்துவதற்குச் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.**

ஆரம்பத்தில் இதுவொரு சோதனைத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தச் சேவையில் பயன்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு ட்ரோன் விமானமும் ஒரே நேரத்தில் 6 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சீனா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இத்தகைய பயணிகள் ட்ரோன் போக்குவரத்துச் சேவைகள் ஏற்கனவே வெற்றிகரமாகச் செயற்பாட்டில் உள்ளன. அந்த நாடுகளின் வெற்றிகரமான மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டே இலங்கையிலும் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பெற்றோர் கொலை; மகன் கைது!

கொழும்பு,ஜூலை 15
எம்பிலாபிட்டிய, கிரலவெல் கடுவ பகுதியில் தாய், தந்தையரைக் கொலைசெய்த குற்றச்சாட்டில் மகன் கைது செய்யப்பட்டுள்ளார். தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறிச் சென்றதால் இந்தக் கொலை நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளவர்கள் 58 வயதுடைய தந்தை மற்றும் 54 வயதுடைய தாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக தம்பதியரின் 26 வயதுடைய மகனே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## 6 கிலோ 'குஷ்' போதையுடன் பிலிப்பைன்ஸ் பெண் கைது!

கொழும்பு,ஜூலை 15
6 கிலோ 180 கிராம் 'குஷ்' போதைப்பொருளை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
இதேவேளை, நேற்று முன்தினம் தொம்பே, பரன்கொட பகுதியில் 9 கிலோ 128 கிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## சாலேயின் மனு ஒத்திவைப்பு!

தன்னைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு எதிராக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலே தாக்கல் செய்த மனு மீதான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. (ச-இ)

# விவசாயிகளுக்காக புதிய வங்கி நிறுவல்

கொழும்பு,ஜூலை 15
விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதிக வட்டிக்கு கடன் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் புதிய வங்கி ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
இதுகுறித்து வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவிக்கையில்,
இந்த வங்கியின் ஊடாக ஒரு ஏக்கர் விவசாய நிலத்துக்கு ஒரு இலட்சம் ரூபா உற்பத்திச் செலவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
அத்துடன், சீனாவுடன் கலந்துரையாடி ஒவ்வொரு விவசாயத் திட்டத்திலும் 'விவசாய உபகரண மத்திய நிலையம்' ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்- என்றார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். சந்தை மேற்பார்வையாளர் தரம் III பதவி வெற்றிடத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

வடமாகாண கௌரவ ஆளுநரால் 01.01.2013 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவையின் சந்தை மேற்பார்வையாளர் பதவிக்கான சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் கீழ் குறிப்பிடப்படும் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் நிரந்தர பதவிகளில் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சந்தை மேற்பார்வையாளர் | III | 01 |

**பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வலிகாமம் தென்மேற்கு பிரதேச எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். போதிய விண்ணப்பங்கள் நிரந்தர எல்லைக்குள் வதிவிடத்தை கொண்டவர்களிடமிருந்து கிடைக்கப்பெறாதவிடத்து யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். இவை கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- வயது - வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**

- வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாகக் கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- நியமனம் பெறுபவர்கள் ஒருவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.
- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 5 வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி, தொழில்சார் தகைமைகள்**

- விண்ணப்பதாரி வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் தேர்ச்சியற்ற சேவையில் கடமையாற்றுபவராகவும் PL 1 சம்பள தொகுதியுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**

- பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கமைவான சம்பளத்தொகுதி MN 1 - 2025 இற்கு ஏற்ப சந்தை மேற்பார்வையாளர் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 45,230 10x540-11x630-10x890 -10x1190 -78360/- ஆகும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 2026.07.30**

**விண்ணப்பிக்கும் முறை**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.07.15 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் போதோ அல்லது நியமனத்தின் பின்னரோ தெரியவரும் போது அல்லது தகவலொன்று பொய்யானது என தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச்செய்யப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

செயலாளர், 15.07.2026
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (CR/054) J-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30 . 04 . 1937

மறைவு 11 . 07 . 2026

எனது ஆருயிர் நண்பனான
மதிவாணன் PD இன் பாசமிகு தாயார்

### திருமதி பொடியப்பு திரேசம்மா

அவர்கள்
இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவின் துயரால்
**நியூ ராம் கென்ஸ்ட்ரக்ஸன்
உரிமையாளர்களும்,
ஊழியர்களும்.**

(CS 32153) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 02 . 1954

மறைவு 13 . 07 . 2026

### தேவராஜா தனலட்சுமி (தனம்)

(ஆவரங்கால்)

யாழ். ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட தேவராஜா தனலட்சுமி (தனம்) 13.07.2026 திங்கள்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் தேவராஜாவின் (சரசாலை) அன்பு மனைவியும், லமீர்தா (லண்டன்), தேனுகா (லண்டன்), இராஜதேவ் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரதீப் (லண்டன்) இன் பாசமிகு மாமியும், ரிஷானின் (லண்டன்) அம்மம்மாவும், பரமேஸ்வரன் (லண்டன்), பாலசிங்கம் (லண்டன்), குகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனிமொழி (லண்டன்), சுபாஜினி (லண்டன்), கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனியும், சஜீவன் (லண்டன்), ஜனனி (லண்டன்), யாழினி (லண்டன்), கரிஸ் (லண்டன்), செலினா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், கவிதா, பகீரதி, கிருஷ்ணகாந்தன் ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், கமலாம்பிகை, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், திருக்குமரன் (லண்டன்), திருமகள் (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஆறுமுகநாதன், மகேந்திரன் மற்றும் இந்துமதி (கனடா), தேவநாதன் (நெதர்லாந்து), ஆனந்தி, தெய்வீகநாதன் (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.07.2026) வியாழன் முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்.

தகவல்:
பரமேஸ்வரன் (00447305003007) - சகோதரன்
பாலசிங்கம் (0094762011316) - சகோதரன்
இராஜதேவ் (00447449643336) - மகன்
லமீர்தா (00447483430112) - மகள்

(CR 056)A

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 01 . 1957

இறப்பு 14 . 07 . 2026

### சுந்தரம்பிள்ளை கருணாகரன்

(மணியகாரர்-ஈழத்துச்சிதம்பரம், முன்னாள் உரிமையாளர் - கருணா கபே)

காரைநகர் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், நீலிப்பந்தனை, காரைநகர் மற்றும் கொக்குவில், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கருணாகரன் அவர்கள் நேற்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை திண்ணபுரத்தான் திருக்கழல்களில் நித்திய இளைப்பாறுதலை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - ஈஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், சுந்தரேஷ்வரியின் அன்புச் சகோதரனும், பிரணவன் (நெதர்லாந்து), சுபாநந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெசிக்கா (நெதர்லாந்து), பிரதீபன் (iStock mobile shop - நாச்சிமார் கோவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தகுமாரி, வசந்தகுமாரன் (நெதர்லாந்து), கோமதி, சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தங்கராசா, சுமதி, உதயணன், ஸ்ரீசுந்தராஜா ஆகியோரின் சகலனும், ஆத்விக், ஆதித், அவினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், துளசி, ரவிராசா, கிருஷ்ணராசா, ஸ்ரீகணா ஆகியோரின் சித்தப்பாவும், பிரியங்கா, சுஜிந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை காலை 5.00 மணி முதல் 59/3, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
வசந்தன் (மைத்துனர்) : +94 76 544 2324
பிரணவன் (மகன்) : +94 71 717 8783
பிரதீபன் (மருமகன்) : +94 77 117 8783

(CS 32154)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 . 01 . 1945 | 14 . 07 . 2026 |

(CS/61875) J-1

## வல்லிபுரம் பஞ்சலிங்கம்

சோடா கொம்பனி ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலாம்பிகையின் அன்பு கணவரும், ரூபாகரன், ஜீவாகரன் (லண்டன்), வசீகரன் (கால்நடை வைத்திய அலுவலகம், உடுவில்), சுபாஜினி, யசோகரன் ஆகியோரின் ஆருயிர் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரிஅம்மா, செல்வலிங்கம், மகாலிங்கம், சுந்தரலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, கந்தசாமி மற்றும் முத்துக்குமாரசாமி, பூரணேஸ்வரி, மங்கயக்கரசி, மணிமேகலை ஆகியோரின் அன்பு மைத்துனரும், தமயந்தி (பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), சசிரேகா (லண்டன்), வேதப்பிரியா (அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), சதுணியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரதி, ஆதவன், அகரன் (லண்டன்), சஜிந்தவி, காவியன், கவிநெயன், பிரவிந், லக்விந், சஸ்விந் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2026) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நரியிட்டான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மல்லாகம் கிழக்கு, மல்லாகம்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 . 08 . 1944 | 21 . 06 . 2020 |

## அமரர் ருக்குமணி ஆனந்தவேல்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: பூர்வபக்க பிரதமை (15.07.2026)

அன்பு அன்னையே!
எங்களை விட்டு மறைந்தாலும் குறையாத நேசம்
கண்ணீர் துடைத்த தாயின் பாசம்
சொல்லாத பாடங்கள் சொல்லித் தந்தீர்!
ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
வாழ்வில் ஒளியாக என்றும் எங்கள்
இதயத்தில் வாழ்கிறீர்கள் தாயே!

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs.61868) N

# திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 15

மீசாலை பழமுதிர்ச் சோலை உள்ளூர் உற்பத்தி நிலையத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற் பற்பகல் 2 மணிக்கு ஏ9 வீதியில் அமைந்துள்ள மீசாலை பழமுதிர்ச் சோலையில் இடம்பெறவுள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரமான உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் நோக்கில், இந்த விற்பனைத் தளம் திறந்து வைக்கப்படவுள்ளது. (க - 159)

## வேப்பமரம் விற்பனைக்கு

எமது சமாசத்தில் உள்ள ஒரு பட்ட வேப்பமரம், 2 உயிர் மரம் விற்பனைக்கு உள்ளது. மரத்தை வாங்க விரும்புவோர் காலை 9.00 மணி - மாலை 4.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
இல. 111, பிரதான வீதி (மடத்தடி), யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 2662

CR/044) J-1

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் உற்சவ காலத்தில் கோவிலை சுற்றியுள்ள பகுதியில் நிரவுவதற்காக மணல் கொள்வனவுக்கான கேள்விகள் கோரல் - 2026

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நல்லூர் உற்சவ காலத்தில் கோவிலை சுற்றியுள்ள பகுதியில் நிரவுவதற்காக மணல் கொள்வனவுக்கான பதிவுசெய்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 15.07.2026 – 24.07.2026 ஆம் திகதி வரை சபையின் பெறுகை முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்பு கொண்டு கூறுவிலைப் படிவங்களினைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 24.07.2026 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாகப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விதிறக்கும் திகதி: 24.07.2026

நேரம்: முற்பகல் 10.00 மணி

முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(எ 052 (N)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 12 . 1950 | 14 . 07 . 2026 |

## தருமராசா அன்னலெட்சுமி

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா அன்னலெட்சுமி அவர்கள் நேற்று (14.07.2026) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தருமராசாவின் அன்பு மனைவியும், இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான விஜயலெட்சுமி, யோகரத்தினம் மற்றும் தனலெட்சுமி, விஜயரத்தினம், இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, பிரம்படிலேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 401 5185

(cs 61872) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெயர்மாற்றம்

அளவெட்டி மேற்கு பத்துப்பனையடியைச் சேர்ந்த **ரவீந்திரன் மதீஸ்** ஆகிய நான் எனது பெயரை **ரவீந்திரன் மதீஸா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ரவீந்திரன் மதீஸா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ரவீந்திரன் மதீஸா**

(CS/61874) J-1


# சிறை வன்முறை; போலிப் பரப்புரை!


## வேலை ஆட்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் கணினி அனுபவம் உள்ள பில் கிளாக் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**077 748 8093**

(cr050) (N-1)


கொழும்பு, ஜூலை 15

"நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் போலியான தகவல்களைச் சிலர் பரப்பிவருகின்றனர். சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன."என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் பிரதான விசாரணையை சி.ஐ.டி. முன்னெடுக்கின்றது. இதுவரையில் கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் உட்பட 200 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரி மற்றும் இந்தியப் பிரஜையின் மரணபரிசோதனை தவிர, இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஏனைய அனைவரினதும் மரண பரிசோதனைகளும் முடிவடைந்துள்ளன.

இந்தச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய அறிக்கை முன்வைப்பதற்காக மூவரடங்கிய விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கப்பெறவுள்ளது.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய சூழ்ச்சிசெய்த நபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (அ-இ)


## INVITATION FOR BID 2026_02
## PROVINCIAL DEPARTMENT OF INDIGENOUS MEDICINE, NORTHERN PROVINCE.

01. The Chairman, Department Procurement Committee, on behalf of the Provincial Commissioner, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna. invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.

02. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)**

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"**

04. Qualification's requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Bidding data & Contract Data** (Section 5) for **SBD 1** Documents for works in **Category 01** and in the **Schedule** (Section 5) for **SBD 3** Documents for works in **Category 02**

05. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 16/07/2026 To 06/08/2026 during 09:00 hrs and 15:00 hrs.

06. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Provincial Commissioner, **Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna. (T.P:021-222-0824, Fax: 021-222-0822, email: accountantpdim@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.

07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna. on or before 10:30:00 AM as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

08. Pre-Bid Conference will be held at **Conference Hall, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna. commencing at 10:30:00 AM as stated in table below.**

09. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| Category | | |
|---|---|---|
| Category 01 | Document Issuing/Purchasing Period | From 16/07/2026 To 06/08/2026 |
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 23/07/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 07/08/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/B/IM/KN/2026/01 | Construction of Siddha Dispensary at Visuwamadu, Kilinochchi | 68.58 | 240 | C5, C4 and C3 (Buildings) | 19,000.00 | 686,000.00 | 04/12/2026 | 06/11/2026 |

| Category | | |
|---|---|---|
| Category 02 | Document Issuing/Purchasing Period | from 16/07/2026 To 30/07/2026 |
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 23/07/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 31/07/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| MRC/NP/B/IM/VA/2026/2026/02 | Urgent Repair Work of Rural Siddha Hospital Cheddikulam | 4.15 | 120 | C8, C7 and C6 (Buildings) | 3,000.00 | 42,000.00 | 16/10/2026 | 18/09/2026 |
| MRC/NP/B/IM/KN/2026/01 | Establishment of Chain Link Fencing and G.I Gate with Ramp Work at Herbal Garden, Poonakary | 8.15 | 120 | C8, C7 and C6 (Buildings) | 4,000.00 | 82,000.00 | 13/11/2026 | 16/10/2026 |
| MRC/NP/B/IM/KN/2026/02 | Renovation and Repair Work at Kalmadunagar Herbal Garden, Kilinochchi | 7.05 | 120 | C8, C7 and C6 (Buildings) | 4,000.00 | 71,000.00 | 13/11/2026 | 16/10/2026 |
| MRC/NP/B/IM/KN/2026/03 | Urgent Repair Work at Base Hospital Kilinochchi | 2.55 | 60 | C9, C8 and C7 (Buildings) | 2,000.00 | 26,000.00 | 16/10/2026 | 18/09/2026 |

**Chairman,**
**Department Procurement Committee,**
**Provincial Department of Indigenous Medicine,Northern Province,**
**No.572/3 Hospital Road, Jaffna..**

(cr042) (N-1)




# அமிர்தலிங்கத்துக்கு வலி.மேற்கில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூலை 15

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அமிர்தலிங்கத்தின் திருவுரு வச்சிலையடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் ஈகைச்சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தி, அமிர்தலிங்கத்தின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் தங்க முகுந்தன் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (க-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எண்ணத்திற்கேற்ப வசதிகளைப் பெருக்குவதை விட வசதிகளுக்கேற்ப எண்ணங்களைக் குறைப்பது நலம்.

- அரிஸ்டாட்டில்

புதன் பொய்கை

15.07.2026
புதன்கிழமை

# டெங்குவை வெல்லும் முப்பரிமாண ஆயுதம்: அறிவு, திறன், மனப்பாங்கு!

ஆ. ஜென்சன் ரொனால்ட்
(MSc, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)


**"ஒரு குடும்பத்தின் அலட்சியம் முழுச் சமூகத்தின் ஆபத்து; ஒரு குடும்பத்தின் விழிப்புணர்வு ஒட்டுமொத்த தேசத்தின் பாதுகாப்பு!"**


இலங்கையின் பொதுச் சுகாதாரத்துறை இன்று எதிர்கொள்ளும் ஆகப்பெரிய சவால்களில் முதன்மையானது டெங்கு விவகாரம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தைத் தொடர்ந்து, வயது வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்நோயின் பிடிக்குள் சிக்குகின்றனர். சாதாரணக் காய்ச்சலாகத் தொடங்கி, சில தருணங்களில் உயிருக்கே ஆபத்தான டெங்கு இரத்தக் கசிவு காய்ச்சலாகவோ அல்லது டெங்கு அதிர்ச்சி நிலைக்கோ இது வழிவகுத்துவிடுகிறது. இத்தகைய கொடிய டெங்கு வைரஸை ஒழிப்பது என்பது வெறும் சுகாதாரத்துறையின் கடமை மட்டுமல்ல; அது ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும்.

ஒவ்வொரு வீடும், பாடசாலையும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் கைகோர்த்துச் செயற்பட்டால்மட்டுமே இந்தச் சவாலை நாம் வெற்றிகரமாக வெல்லமுடியும்.

### வைரஸின் விஸ்வரூபமும் உடலின் எதிர்வினையும்

Aedes எனப்படும் பெண் கொசுக்கள் கடிப்பதன் மூலமே இந்த டெங்கு வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப்பரவுகிறது. நம் உடலுக்குள்





நுழையும் இந்த வைரஸ், வெள்ளை அணுக்களில் பெருகி, இரத்த நாளங்களின் சுவர்களைப் பாதித்துக் கடுமையான திரவ இழப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக இரத்த அழுத்தம் குறைவதோடு, குருதிச் சிறுதட்டுகள் வேகமாகக் குறையத் தொடங்குகின்றன. திடீர் காய்ச்சல், கடுமையான தலைவலி, கண் பின்புற வலி மற்றும் உடலில் தோன்றும் சிகப்புப் புள்ளிகள் இதன் ஆரம்ப அறிகுறிகளாகும். குறிப்பாக, காய்ச்சல் குறையும் காலகட்டத்தில் ஏற்படும் கடுமையான வயிற்று வலி, தொடர் வாந்தி, மூச்சுத் திணறல், மூக்கு அல்லது ஈறுகளில் இரத்தக் கசிவு போன்ற 'எச்சரிக்கை அறிகுறிகள்' தென்பட்டால், எவ்விதத் தாமதமுமின்றி உடனடியாக மருத்துவமனையை நாட வேண்டும். ஏனெனில், டெங்குவைக் கொல்லும் பிரத்தியேக மருந்து இன்னும் கண்டறியப்படாத நிலையில், சரியான நேரத்தில் வழங்கப்படும் திரவச் சிகிச்சையே உயிரைக் காக்கும் ஒரே கேடயமாகும்.

### முட்டைகளின் விசித்திரமும் முப்பது நிமிடச் சபதமும்


டெங்குவைப் பரப்பும் கொசுக்கள் பெரும்பாலும் பகல் நேரங்களிலேயே, குறிப்பாகக் காலை மற்றும் மாலை வேளைகளில் மிகச் சுறுசுறுப்பாக இயங்குபவை. இவற்றின் முட்டைகள் மிகவும் விசித்திரமானவை; பல மாதங்கள் வறண்ட நிலையில் இருந்தாலும் அழியாமல் உயிர்வாழும் இயல்புடையவை. மீண்டும் ஒரு சிறு துளி தண்ணீர் கிடைத்தாலும் அவை உடனடியாக பொரித்துவிடக்கூடியவை. எனவே, தேங்கியுள்ள தண்ணீரை வெறும் தரையில் ஊற்றுவது மட்டும் போதாது; பாத்திரங்களை நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். இதனால்தான், வாரத்துக்கு ஒருமுறை என்றில்லாமல், தினமும் ஒரு 30 நிமிடங்களை நமது வீடும் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கிறதா என்று சோதிக்க நாம் ஒதுக்க வேண்டும். தேவையற்ற டயர்கள், சிரட்டைகள், பூந்தொட்டித் தட்டுகள் போன்ற நீர் தேங்கும் இடங்களை அகற்றுவதுடன், காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவர் ஆலோசனையின்றி அஸ்பிரின் அல்லது இபுப்ரோபென் (Ibuprofen) போன்ற மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்த்து, பாராசிட்டமோலை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.


### கூட்டுச் செயற்பாடும் புதிய தொழில்நுட்பங்களும்

டெங்குவைக் கட்டுப்படுத்துவதில் நோயாளிகளைப் பற்றிய விபரங்களை உடனடியாகச் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு அறிவிப்பது மிக முக்கியமானது. இதன் மூலமே கொசுப் பெருக்க இடங்கள் கண்டறியப்பட்டு, நோய் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. கிராம மட்டத்திலான டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கள், பொது நிறுவனங்கள், மற்றும் மத அமைப்புகளின் ஒருங்கிணைந்த பங்களிப்பு இதற்கு அவசியமாகும். இன்றைய நவீன உலகில், டெங்குத் தடுப்பூசிகள் மற்றும் 'வொல்பாக்கியா' எனப்படும் பயனுள்ள பக்டீரியாவை கொசுக்களுக்குள் செலுத்தி அவற்றின் வைரஸ் பரப்பும் திறனைக் குறைக்கும் உயிரியல் தொழில்நுட்பங்கள் உலகளவில் நல்ல பலனைத் தந்து வருகின்றன.

முடிவாக, டெங்கு என்பது வெறும் கொசுவினால் வரும் நோய் மட்டுமல்ல; அது நமது ஒழுக்கம், சுற்றுப்புறச் சுத்தம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வைச் சோதிக்கும் ஒரு பொதுச் சுகாதாரச் சவால். அறிவும், கொசுக்களை ஒழிக்கும் திறனும், "இது என் பொறுப்பு" என்ற மனப்பாங்கும் நம்மிடம் ஒன்றிணையும் போது மட்டுமே, டெங்கு இல்லாத ஆரோக்கியமானதொரு இலங்கையை நம்மால் உருவாக்க முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்முறை எண்ணங்கள் பெருகும் வன்முறை எண்ணங்கள் அருகும் வாழ்வொழுங்கைக் கட்டமைத்தல்

ஆனையூர்க் கவிராயர்



எல்லையில்லாது பரந்தியங்கும் இப்பிரபஞ்ச நிகழ்வியலில் ஒரு சிற்றங்கமாகச் சுற்றிச்சுழலும் நமது பூமித்தாயின் அளவற்ற கருணையின் விளைவால், தோன்றி மறையும் பல்லாயிரம் வகையிலான உயிராற்றல்களில் ஒரு உன்னதப் பிறப்பே இம் மானிடப்பிறப்பாகும். கிடைத்தற்கரிய மானிடப்பிறவி கிடைக்கப்பெற்ற நாம் ஏனைய உயிரினங்களைப் போலவன்றி, என்றும் இவ்வுலகின் மடிமீது மாற்றத்தைத் தோற்றுவிக்கும் படைப்பியக்க வல்லுநர்களாக வாழ்வை நகர்த்திச் செல்கின்றோம்.

சிந்தனைத் திறனும் பேச்சு ஆற்றலும் உயரிய செயல்திறனுமே மனித இனத்தின் இவ்வகை வளர்ச்சிக்கு காரணகர்த்தாக்களாகும். நீதி, நியாயம், சட்டம், ஒழுங்கு, அரசாட்சி என இன்னோரன்ன வாழ்வியலொழுங்கை கட்டமைத்து வாழும் அறிவியலாட்சியில், நவீன உலகில் எத்தனையோ மானிட ஜென்மங்களின் விலங்குகளிலும் மோசமான நடத்தைக் கோலங்களையும் நாம் கண்கூடாகக் காணமுடிகின்றதென்றால் அதுவொன்றும் பொய்மையன்று. சரி, பிழை தெரிந்து உகந்தது ஒவ்வாததை புரிந்து ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே வழிநடத்தும் அறிவாற்றல் இருந்தும் ஏன் எத்தனையோ கொடுஞ் செயல்களால் மனிதன் ஆட்கொள்ளப்படுகின்றான்? பாவம், இரக்கம் கருணை எனப்படுகின்ற மனித இயல்புகளை எல்லாம் இத்தகைய மோசமான நடத்தைகளிடம் ஏன் பலிகொடுக்கின்றான்? அறிவுலகம் விடை காணவேண்டிய மாபெரும் கேள்விகள் இவை. நீதி, நியாயத்துக்கு கட்டுப்பட்டு, அன்பின் அடிவருடிகளாக, பண்பின் திருவுருவங்களாக, பிணக்குகளுக்கு மென்முறையில் தீர்வு காணும் மனோதிறன் படைத்த எத்தனையோ மனிதர்களும் இவ்வுலகில் தானே வாழ்கின்றார்கள். மனித நடத்தைக்கோலங்களில் ஏன் இத்தனை வேறுபாடுகள்? வன்முறை எனும் பாடத்தை ஒரு மனிதன் இளவயதிலேயே தனது குடும்பச் சூழலில் கற்றுக்கொள்கிறானா அல்லது சமூகத்தில் கற்றுக்கொள்கிறானா என்பது ஒரு சிந்தனைக்குரிய விடயமாகும். இந்தச் சிந்தனைத் தளத்தில் நின்றே நாம் இவ்விடயத்தினை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

### கடிவாளம் இல்லாத மனக்குதிரையின் செயற்பாடாக அடிதடி வன்முறைகள்

எண்ணற்ற உயிரினங்கள் வண்ணமுற வாழும் இம்மாநிலத்தில், இயற்கையான இயங்கு நிலையை அறிவுசார் செயலொழுங்குகளால் கட்டுப்படுத்தி சிந்தித்துச் செயலாற்றும் அறிவுத்திறன் உள்ளவனாக மனிதன் படைக்கப்படுகின்றான். அத்தகைய மனிதன் அறிவை ஆயுதமாகக் கொண்டு பகைமையை வென்று அமைதியாக வாழமுடியாமல் நித்தம் நித்தம் இரத்தம் சிந்தி நிம்மதியை இழக்கின்றான். மென்முறை எண்ணங்களின் தாலாட்டில் வாழத் தெரியாமல் வன்முறை எண்ணங்களின் வசமாகி வாழ்வையே சுடுகாடாக மாற்றுகின்றான். எமது யாழ். மண்ணில் போர்ச்சூழல் மாறி அமைதியாக மக்கள் வாழ்ந்தாலும் தனிப்பட்ட தகராறுகள், வாள்வெட்டுச் சம்பவங்கள், வீடுகள், வாகனங்கள் அடித்து நொருக்கப்படுதல் முதலான வன்முறையின் கோர வடிவங்கள் நமது மக்களை வன்முறையாளர்களாக இனங்காட்டுகின்றன. பெற்றோருக்கு பயந்து அடங்கி அமைதியாக வாழவேண்டிய மிக இளவயதினரே இத்தகைய மோசமான நாசகாரச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

தமக்காகவும் தமது குடும்ப உறவுகளுக்காகவும் படித்து உழைத்து முன்னேற்றப் பாதையில் முழுமூச்சுடன் வீறு நடைபோட வேண்டிய வயதில், தம்மையும் தமது குடும்பத்தையும் முழுச் சமூகத்தையும் சீரழிக்க முனைகின்றனர் குறிப்பிடப்பட்ட சிறு சிறு குழுவினரின் இத்தகைய கண்மூடித்தனமான கட்டுமீறிய மோசமான வன்முறைச் சம்பவங்களால் முழுச்சமூகமும் ஏதோ ஒரு வகையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது. இத்தகைய வன்முறைகளின் அதீத வளர்ச்சிக்கு மது மற்றும் போதைப்பொருள் பாவனையும் காரணிகளாய் அமைகின்றன என்பதுவும் அவதானத்திற்குரியதாகும். இவ்வன்முறையாளர்களான இளவயதினர் வன்முறையிலும் இருக்க வேண்டிய வரன்முறைகளையும் மீறிய ஈவிரக்கமற்ற நாசகாரமான படுமோசமான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அறிவுக்கண்ணை குருடாக்கும் போதைப் பாவனையே காரணம் என்னும்போது போதைக்கெதிராகவும் போராட வேண்டும்.

நமது நாட்டில் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறுவதற்கு முந்திய காலப்பகுதியில் கிராமத்துக்குக் கிராமம் மற்றும் நகர்ப்பகுதிகளிலும் 'சண்டியன்கள்' என அழைக்கப்படுபவர்கள் அநேகம் பேர் இருந்துள்ளனர். அவர்கள் அநேகமாக வயது கூடியவர்களாகவும் குடும்பஸ்தர்களாகவும் இருந்துள்ளதுடன் எவ்வித அடிதடி உபகரணங்களும் இன்றி தமது கைகால்களினால் தமது எதிரிகளைத் தாக்கியடக்கும் பலசாலிகளாகவும் இருந்துள்ளனர். மோதல் போக்கு கையை மீறித் தொடரும் பட்சத்திலேயே ஆயுதப்பாவனை இடம்பெறும். அத்துடன் தாக்கியவனைத் தாக்கும் ஒரு நிதானத்துடன் கூடிய மனோதர்மம் இருந்துள்ளது. எதிராளியின் உறவினர்களையோ அசையும் அசையாத சொத்துகளையோ தாக்குவதில்லை. ஆனால் இன்று நடப்பதோ முற்றிலும் படுமோசம். அதீத பழிவாங்கும் உணர்வு அறிவுக் கண்ணை முற்றிலும் மறைக்க, எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளல், வீடு மற்றும் அவர்களது வாகனங்களை அடித்துடைத்தல் என கண்மூடித்தனமாக நடந்து முடிக்கின்றன. இவை குறித்த இளவயதினர் மத்தியில் வன்முறை எண்ணங்கள் மேலோங்குவதற்கு சான்றாதாரங்களாக அமைவுறுகின்றன. கெரில்லாப் போர்ப் பாணியில் எதிர்பாராமல் தோன்றி அதிரடியாகத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடும் சம்பவங்களாகவே காணப்படுகின்றன.

இத்தகைய வன்முறை எண்ணங்கள் இளைஞர்கள் மத்தியில் ஊடுருவி அவர்கள் வன்முறைக் கும்பல்களாகச் சமூகத்தால் இனங்காணப்படும் ஏதுநிலை எவ்வாறு உருவானது? இது சமூக நலன்விரும்பிகளின் சிந்தனைக்குரிய விடயமாகும். சமூகத்தில் ஒரு சாரார் படித்து பட்டங்கள் பெற்று அரச பதவிகளை அலங்கரிக்க, வேறொரு சாரார் உழைத்து முன்னேறி அமைதியான வாழ்வொழுங்கில் வாழ மிகக்குறைந்த விழுக்காட்டினர் ஏன் இத்தகைய வன்முறையின் வழித்தோன்றல்களாய் மென்முறைக்கு அந்நியமானவர்களாக வாழவேண்டும்? இவர்கள் பிறக்கும் போதே வன்முறையாளர்களாகப் பிறந்தவர்களா? இல்லையே! அவர்களுக்கு நல்ல குடும்பச்சூழல் கிடைக்கப் பெறவில்லை. உரிய கல்வி வழங்கப்படவில்லை. உயரிய வாழ்க்கைநெறிகள் போதிக்கப்படவில்லை இதற்கு யார் காரணம்? அவர்களது பெற்றோரா? அல்லது சமூகமா? அல்லது அரசா? அல்லது இவை எல்லாமுமா? இவர்களை சட்டத்தின் இரும்புக்கரம் கொண்டு கைதுசெய்து தண்டனை வழங்கினால் திருந்தி விடுவார்களா? இனி சமூகத்தில் இத்தகைய இளைஞர்கள் உருவாகமாட்டார்களா?

இவ்வாழ்வியல் கோணத்தில் நின்றும் வையகத்திற்கு வாழ்நெறி கூறும் பொய்யா மொழிப்புலவரின் குறளொன்றை நோக்குவோம்.

"கொலையிற் கொடியோரை வேந்தொறுத்தல் பைங்கூழ்களை கட்டதனோடு நேர்"

இக்குறளின் பொருள் யாதெனில், கொடிய குற்றம் புரிவோருக்கு மரண தண்டனை அளித்து, நல்லவர்களைக் காக்கும் அரசனது செயல், பயிர் நன்கு வளர களையைப் பிடுங்கி எறிவது போன்றதாகும். இங்கு களைகளைப் பிடுங்கி அழிப்பதன் மூலம் நெல் போன்ற பயிர்களைப் பாதுகாக்க முடியும். நெல்லோ களையோ அல்லது புல்லோ வேறு. ஒரு போதும் நெல் புல்லாக மாறுவதில்லை. ஆனால் வன்முறையாளர்கள் மனித ஜீவன்களை உறுப்பினராகக் கொண்ட அதே சமூகத்தில் இருந்து மனிதப் பிறவிகளிலிருந்தே உருவாகிறார்கள். அவர்களை நெல்லாக மாற்ற முடியும். புல்லாக உருமாறாமல் தடுக்க இயலும். இது ஒரு குடும்பத்தின் ஒரு சமூகத்தின் ஒரு அரசின் கடமை. கூட்டுப்பொறுப்பு. இந்த வகையிலேயே சிந்திக்க வேண்டும். ஒருவேளை வன்முறையாளர்கள் எமது உறவினர்கள் அல்லர், எமது ஆட்கள் இல்லை, அவர்களின் வன்முறைகளால் நமக்கு பாதிப்பு இல்லை என எண்ணலாம். அது தவறு. நாம் மானிடப் பிறவிகள் சகமனிதர்கள் தொடர்பிலும் அக்கறை கொள்ள வேண்டும். இது மானிட தர்மம். நெல்லாகப் பிறந்து புல்லாக மாறுபவர்களின் விடயத்தில் நாம் பரந்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்:

## சங்க இலக்கியத்திலிருந்து சமகாலத்துக்கான ஒரு பார்வை





ந. சுபாஷினி
(உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)


ஒரு சிறந்த படைப்பை அணுகுவதற்கு முன்னால், அதன் படைப்பாளியைப் பற்றி அறிந்திருப்பது அவசியமானது. தமிழ் இலக்கியப் பரப்பில் புலமையாளராக, கவிஞராக, சிறுகதை ஆசிரியராக மற்றும் சிறந்த உரையாளராக விளங்குபவர் விரிவுரையாளர் த. அஜந்தகுமார். மேடைகளில் தனது நாவன்மையால் சொற்பொழிவாற்றி கேட்போரைக் கட்டிப்போடும் இவரது ஆளுமையும், கவிதை மற்றும் சிறுகதை வழியே மனித மனங்களையும் சமூக யதார்த்தங்களையும் படம் பிடிக்கும் இவரது கலைத்துவப் பார்வையும் ஒன்றிணைந்து, இந்நூலின் ஒவ்வொரு வரியிலும் மிக ஆழமாகப் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது. வெறும் ஏட்டுக்கல்வியாக இலக்கியத்தை நுகராமல், ஒரு சிறந்த சமூக வழிகாட்டியாக நின்று, பழமையின் வேர்களில் இருந்து புதுமையின் பிம்பங்களைத் தேட விழையும் ஆசிரியரின் மதிநுட்பம் பாராட்டுக்குரியது.

'பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்' என்ற நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கட்டுரைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், அதன் அட்டைப்படத்தைப் பற்றிப் பேசியே ஆகவேண்டும். வாசகனை எழுத்துக்குள் இழுத்துச் செல்லும் திறவுகோலாகச் செயற்படும் இந்த அட்டைப்படம், என்னை வெவ்வேறு கோணங்களில் சிந்திக்க வைத்தது. சங்க காலத்தின் கண்ணாடி, சமகாலத்துக்கான பயணத்தில் சிதைவடைந்து, அந்தச் சிதைந்த கண்ணாடியின் ஒவ்வொரு துகள்களும் ஏதோவொரு சமூகப் பிரச்சினை பற்றிச் சிந்திப்பதற்கும், குரல் எழுப்புவதற்கும் கூர்மையான ஆயுதமாகச் செயற்படுவதை அட்டைப்படம் உணர்த்துகிறது. அதிலுள்ள கறுப்பு -வெள்ளைக் கோடுகள் மனித மனத்தின் சிக்கல்களையும் காலத்தின் அடுக்குகளையும் குறிப்பதாகவும், நடுவே நிழல் உருவமாகத் தெரியும் மனித பிம்பம் பழமையின் பின்னணியில் நின்று சமகாலத்தை உற்றுநோக்கும் ஒரு தேடலின் அடையாளமாகவும் அமைந்துள்ளது. சுருங்கக் கூறின், அட்டைப்படத்தின் கலைநேர்த்தியே உள்ளே இருக்கும் கட்டுரைகளின் கனதியை வெளிப்படுத்திவிடுகிறது. இந்நூல் ஜீவநதி பதிப்பக வெளியீடாக 2025 டிசம்பரில் வெளிவந்துள்ளது.

### வானரங்கள் கைசேர்ந்த சீதையின் ஆபரணங்கள்

நூலின் முதலாவது கட்டுரையின் தலைப்பான 'வானரங்கள் கைசேர்ந்த சீதையின் ஆபரணங்கள்' என்பதே சற்று வித்தியாசமாகவும், பலதரப்பட்ட கேள்விகளை எழுப்புவதாகவும் அமைந்துள்ளது. இராமாயணத்தில் சீதை வீசியெறிந்த ஆபரணங்களைக் குரங்குகள் கண்டெடுத்து, அவற்றை எங்கே, எப்படி அணிவது என்று தெரியாமல் மாறி மாறி அணிந்து மகிழ்ந்த புராணக் கதையை ஆசிரியர் இங்கு மிக நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். "இலக்கியங்கள் நமது வாழ்வைப் பிரதிபலிப்பதோடு நின்றுவிடுவதில்லை; அவை வாழ்வைக் கேள்விக்குட்படுத்துவதிலும் தீவிரமாக இயங்குவன" என்ற உன்னத உண்மைகளோடு இக்கட்டுரை தொடங்குகிறது.

"கடந்த காலத்தின் வேர்களைத் தேடாமல், நிகழ் காலத்தின் கிளைகள் செழிக்க முடியாது"

பண்டைய இலக்கியங்களைப் படிக்காமல், இன்றைய ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் கவர்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் சமகாலச் சமூகத்தின் போக்கை வள்ளுவரின் 'பேதைமை' அதிகாரத்தைக் கொண்டு சாடுகிறார் ஆசிரியர். பொருளாதாரம், சுதந்திரம், வெளிநாட்டு மோகம், வேலைவாய்ப்பின்மை, கல்விப் பட்டங்கள் என அனைத்தும் இன்று நம் கைகளில் இருந்தும், அவற்றைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாமல் தவிக்கும் இன்றைய நுகர்வோர் கலாசாரத்தையும், புலம்பெயர் வாழ்வின் சிக்கல்களையும் ஈராயிரம் ஆண்டுப் பழமையான புறநானூற்றுப் பாடலோடும், இராமாயணத் தொன்மத்தோடும் பொருத்தி 2026ஆம் ஆண்டின் சமகால யதார்த்தமாக உடைத்துப் பேசியிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

### புகழ்வதும் புலவரும்: படைப்பாளியின் சமூகப் பொறுப்பு

'புகழ்வதும் புலவரும்' என்ற அடுத்த கட்டுரை, சமகாலப் படைப்பாளியின் நிலையையும், சங்க காலப் புலவர்களின் சமூகப் பொறுப்புணர்வையும் மிக ஆழமாக ஒப்பிட்டு நோக்குகிறது. படைப்பாளிகள் வெறும் கல்வெட்டு எழுதுவதற்கோ அல்லது காதல் கவிதை எழுதுவதற்கோ மட்டும்தான் தகுதியானவர்கள் என்ற குறுகிய சமூக மனப்பான்மை நிலவுவதையும், இன்றைய அரசு வழங்கும் விருதுகளும் சடங்குகளும் கலைஞர்களின் சிந்தனைகளைச் சிறை வைக்கின்றனவா என்ற நியாயமான கேள்வியையும் ஆசிரியர் முன்வைக்கிறார்.

இதற்கு மாறாக, பழங்காலத்தில் அரசனைப் பாடிப் பரிசு பெற்றபோதிலும், புகழ்ச்சிக்கு அப்பால் அவனுக்கு நல்வழி காட்டும் 'செவியறிவுறூஉ' வழங்கும் உன்னதப் பொறுப்பினைப் புலவர்கள் கொண்டிருந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி நிறுவுகிறார். மாங்குடி மருதனார், வெள்ளைக்குடி நாகனார், ஔவையார், மோசிகீரனார் போன்ற சங்கப் புலவர்கள் இயற்கையோடும் மக்களோடும் பிணைந்து நின்று, நிலத்தை விட ஆள்வோரே முக்கியம் என்றும், "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னனே உயிர்" என்றும் பாடி, அரசு இயந்திரத்தை நல்வழிப்படுத்தினர் என்பதைப் பறைசாற்றுகிறார். வெறும் புகழ் பாடுவதும் அறம் பாடுவதும் மட்டும்தானா படைப்பாளியின் தொழில்? என்ற சிந்தனைமிக்க கேள்வியுடன் இக்கட்டுரை நிறைவடைவது வாசகரைக் குடையத் தொடங்குகிறது.

### மரபை மறைக்கும் மாமத யானைகள்

'மரபை மறைக்கும் மாமத யானைகள்' என்ற தலைப்பு தத்துவார்த்த விவாதத்திற்கு மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறது.

பாகனின் சொல்லுக்குக்
கட்டுப்படாத மதயானையைப் போல,
நவீன வசதிகளை அள்ளித்தரும் உலகிற்கு அடிமையாகிவிட்ட நமது மனமானது, நமது பாரம்பரியத்தின் பெருமைகளையும் அதன் வாழ்வியல் விழுமியங்களையும் நமக்குத் தெரியாமல் மறைத்துவிடுகிறது என்பதையே 'மாமத யானைகள்' என்ற பதம் குறிக்கிறது.

நவீனத்துவத்தின் இரும்புக்கரங்களுக்குள் நசுங்கிப் போகும் தமிழ் மரபின் செழுமையையும், அதனை அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய அவசியத்தையும் இக்கட்டுரை ஆழமாகப் பேசுகிறது. நாமக்கல் கவிஞர் மற்றும் பாரதியின் சிந்தனைகளுடன் தொடங்கும் இக்கட்டுரை, வெறும் பழங்கதைகளைப் பேசிப் பெருமை கொள்வதோடு நின்றுவிடாமல், தொல்காப்பியம் மற்றும் புறநானூற்றுப் பாடல்களின் வழியே மரபினை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வலியுறுத்துகிறது. இறுதியாக, இத்தகைய மனமாயைகளை நீக்கி, மு.தளையசிங்கத்தின் கவிதை வரிகளோடு, "இரண்டாயிரமாண்டுப் பழைய சுமையிறக்கிப் பண்பாட்டு ஒளியை நோக்கி நடைபோட வேண்டும்" என்ற அறைகூவலுடன் இக்கட்டுரை நிறைவடைகிறது.

### ஒலி அவிந்தன்றே இவ் அழுங்கல் ஊரே: கொரோனா கால மௌனம்

ஆசிரியரின் 'ஒலி அவிந்தன்றே இவ் அழுங்கல் ஊரே' என்ற கட்டுரை, உலகையே உலுக்கிய கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலத்து அமைதியையும், மனித இனத்தின் தவிப்பையும் சங்க இலக்கிய, நவீன கலைத்துவப் பின்னணியோடு ஒப்பிட்டு நோக்கும் ஓர் உன்னதக் கட்டுரையாகும். தொற்றின் தாக்கத்தால் உலக நாடுகளின் தலைக்கனம் அடங்கி, வல்லரசுகள் ஒடுங்கி, சத்தமும் ஆரவாரமும் நிறைந்த உலகம் திடீரென ஒரு மோனத் தவ அமைதிக்குள் மூழ்கியதை யதார்த்தமாகப் பதிவு செய்கிறார்.

இந்த அமைதிக்குச் சான்றாக அகநானூற்றுப் பாடல் மற்றும் இராமாயணச் சம்பவத்தை ஆசிரியர் ஒப்பிடுகிறார். அதாவது, இராவணனுடன் போர் தொடுக்க ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த இராமன், அங்கிருந்த பறவைகளின் இரைச்சலைத் தன் கட்டளையால் அடக்கியதால் அந்த ஊரே 'ஒலி அவிந்து' அமைதியான புராணச் சம்பவத்தை, கொரோனா உலகம் முழுவதையும் அமைதியாக்கிய சூழலுக்குப் பொருத்தமான உவமையாக்குகிறார். முத்தொள்ளாயிரத் தலைவியின் உவமையோடு, வீட்டின் கதவுகளுக்குள் முடங்கிக் கிடந்த மக்களின் சிறைவாழ்வை ஒப்பிட்டு, இத்தாலிக்குக் கியூபா செய்த பேருதவி போன்ற மனிதநேயச் செயல்பாடுகள் ஒரு பசுமையான நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்தன என்கிறார்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமெரிக்கா-ஈரான் போர்க்களமும் புவிசார் பூகம்பமும்!

கடந்த வாரத் தொடர்ச்சி

○சபாலிங்கம் பிரசன்னா

ஈரானின் நேரடி ஏவுகணைத் தாக்குதல்களும், பினாமி அமைப்புகளால் உருவாகும் எல்லைப் பிரச்சினைகளும் இஸ்ரேலை ஒரு பன்முகப் போர்முனைக்குத் தள்ளியுள்ளன. இது இஸ்ரேல்=அரபு நாடுகளுக்கு இடையிலான தற்காலிக அமைதி முயற்சிகளை முடக்கியுள்ளதுடன், பிராந்தியத்தில் இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவினங்களைப் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

வளைகுடா நாடுகளின் வெளியுறவுக் கொள்கை மாற்றம்: சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் குவைத் போன்ற வளைகுடா நாடுகள் பாரம்பரியமாக அமெரிக்காவின் பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்தவை. ஆனால், அமெரிக்காவின் இராணுவக் கவனம் சிதறுவதையும், தங்களின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் ஈரானியத் தாக்குதலுக்கு உள்ளாவதையும் கண்ட வளைகுடா நாடுகள், அமெரிக்காவை மட்டும் நம்பியிருக்கும் வெளியுறவுக் கொள்கையை மாற்றத் தொடங்கியுள்ளன. அவை சீனா மற்றும் ரஷ்யாவுடன் ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதுடன், ஈரானுடன் தற்காலிக சுமுக நிலையை எட்டவும் மறைமுகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தியாவுகான இராஜதந்திரச் சோதனை: இப்போரானது ஆசியாவின் வளர்ந்து வரும் வல்லரசான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்குக் கடுமையான சோதனையாக அமைந்துள்ளது. இந்தியா, அமெரிக்காவுடன் தனது இந்தோ=பசிபிக் மற்றும் குவாட் (QUAD) இணைப்பைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அதேவேளை, ஈரானில் உள்ள இந்தியாவின் மூலோபாய முதலீடான 'சாபஹார் துறைமுகம்' மற்றும் மத்திய ஆசியாவிற்கான வர்த்தகப் பாதைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஈரானுடனும் இணக்கமான உறவை நீடிக்க வேண்டியுள்ளது. இதனால் இந்தியா ஒரு நெகிழ்ச்சியான இராஜதந்திர அணுகுமுறையைக் கையாள்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி: அமெரிக்காவின் முக்கியமான நட்பு சக்தியான ஐரோப்பிய ஒன்றியம் இந்த மோதலால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பாவிற்கு வரும் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம் தடைபட்டுள்ளதால், ஐரோப்பிய நாடுகள் கடுமையான எரிசக்தி நெருக்கடியைச் சந்திக்கின்றன. அத்துடன், போர் வலயங்களிலிருந்து வெளியேறும் மில்லியன் கணக்கான அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதால், அங்கு புதிய சமூக மற்றும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள் தலைதூக்கியுள்ளன.

**3. சர்வதேச பாதுகாப்புக் கட்டமைப்புச் சிதைவும் அணு ஆயுத அச்சுறுத்தலும்**

பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அதிர்வுகளுக்கு அப்பால், ஈரான்=அமெரிக்கா நேரடி இராணுவ மோதலானது சர்வதேசப் பாதுகாப்புக் கட்டமைப்பில் வரலாறு காணாத அச்சுறுத்தல்களைத் தோற்றுவித்துள்ளது. நவீன பாதுகாப்புத் தத்துவங்களின்படி, இரு பலமிக்க நாடுகளுக்கு இடையிலான யுத்தம் என்பது மரபுசார் போர்முறையோடு நின்றுவிடுவதில்லை; மாறாக, அது நவீன தொழில்நுட்ப ஆயுதப் போட்டிகள், சமச்சீரற்ற போர்முறைகள் மற்றும் எல்லைகளற்ற பயங்கரவாத அச்சுறுத்தல்களை உலகளாவிய ரீதியில் தூண்டிவிடக்கூடியது.

அணுஆயுதப் பரவலாக்கம்: அமெரிக்காவின் கடுமையான இராணுவ அழுத்தங்களுக்கு அஞ்சிய ஈரான், சர்வதேச அணுசக்தி முகாமையின் கட்டுப்பாடுகளை முழுமையாக முறித்துக்கொண்டு, தனது அணுஆயுதத் தயாரிப்புத் திட்டத்தை அதிவேகமாக இறுதி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. ஈரானின் இந்த அணுவாக்க நகர்வானது, அதன் பிராந்திய எதிரிகளான சவுதி அரேபியா, துருக்கி போன்ற நாடுகளையும் தற்காப்புக்காக அணுஆயுதங்களை நோக்கி நகரக் கட்டாயப்படுத்தியுள்ளதுடன், ஒட்டுமொத்த மத்திய கிழக்கையும் ஒரு அணு ஆயுத வெடிமருந்துப் பெட்டியாக மாற்றி வருகிறது.



சைபர் போரும் புதிய அச்சுறுத்தல்களும்: நிலம், கடல் மற்றும் வான்பரப்பைத் தாண்டி, இணையப்பரப்பிலும் இப்போரின் வீச்சு கடுமையாக எதிரொலித்துள்ளது. ஈரான் அரசு ஆதரவு பெற்ற ஹேக்கர் குழுக்கள் மேற்கத்திய நாடுகளின் மின்சாரக் கட்டமைப்பு,

வங்கிச் சேவைகள் மற்றும் அரசு தரவுத்தளங்கள் மீது நடத்திய கொடூரமான சைபர் தாக்குதல்கள் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பிற்குப் பெரும் சவாலாக மாறியுள்ளன. இந்த ஒட்டுமொத்த இராணுவ மற்றும் தொழில்நுட்ப அச்சுறுத்தல்களால் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டுப் பாதுகாப்புக் கோட்பாடு பலவீனமடைந்துள்ளதுடன், உலக நாடுகள் அனைத்தும் தங்களின் மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்துவிட்டு, தேசிய பட்ஜெட்டில் இராணுவத் தற்காப்புச் செலவீனங்களைப் பன்மடங்கு உயர்த்தத் தொடங்கியுள்ளன. மேலும், இப்போரினால் ஏற்பட்டுள்ள பிராந்திய அரசியல் தளர்வைப் பயன்படுத்தி, ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் அல்=கொய்தா போன்ற தடைசெய்யப்பட்ட சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் மீண்டும் தங்களை மறுசீரமைத்துக்கொண்டு தலைதூக்கும் ஆபத்தான சூழல் உருவாகியுள்ளது.

**4. மானிடவியல் பேரழிவும் மனிதநேய நெருக்கடிகளும்**

பொருளாதார மற்றும் பாதுகாப்பு அதிர்வுகளுக்கு அப்பால், ஈரான் = அமெரிக்கா மோதலின் மிகக் கொடூரமான முகம் சமூக மற்றும் மானிடவியல் பேரழிவுகள் ஆகும். மானிடவியல் கோட்பாடுகளின்படி, ஒரு பிராந்தியத்தில் ஏற்படும் தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்கள் அங்கு பல தசாப்தங்களாக நிலவி வந்த சமூக விழுமியங்கள், கலாச்சாரக் கட்டமைப்புகள் மற்றும் மனித உரிமைகளை முற்றாகச் சிதைத்துவிடுகின்றன.

இப்போரின் நேரடி விளைவாக, மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய பிராந்தியங்களிலிருந்து மில்லியன் கணக்கான பொதுமக்கள் தங்களின் பூர்வீக நிலங்களை விட்டு வெளியேறும் வரலாறு காணாத அகதிகள் பிரச்சினை உருவாகியுள்ளது. உள்நாட்டு இடப்பெயர்வுகள் ஒருபுறமிருக்க, அண்டை நாடுகளான துருக்கி, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை நோக்கிப் பாயும் இந்த அகதிகளின் பெருக்கம் சர்வதேச எல்லைகளில் கடுமையான சமூக, அரசியல் பதற்றங்களையும் மனிதநேய நெருக்கடிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. மறுபுறம், போர்ச்சூழலைப் பயன்படுத்தி இருதரப்பிலும் நிகழ்த்தப்படும் கடுமையான மனித உரிமை மீறல்கள் சர்வதேச சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. மக்கள் வாழும் குடியிருப்பு மண்டலங்கள், மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மீது நடத்தப்படும் ஏவுகணைத் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களின் உயிர்வாழும் உரிமையை இழந்துள்ளனர். சர்வதேச ஜெனிவா உடன்படிக்கைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, போர்க்கைதிகள் மற்றும் பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் இணைந்து ஏற்பட்டுள்ள மிகத் தீவிரமான சவால் வளப்பற்றாக்குறை ஆகும். தூய்மையான குடிநீர், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகச் சங்கிலி முற்றாக முடங்கியுள்ளதால், போர் வலயங்களில் பட்டினியும் தொற்றுநோய்களும் மிக வேகமாகப் பரவி வருகின்றன. சுகாதாரக் கட்டமைப்புகளின் வீழ்ச்சி, குடும்பப் பிரிவினைகள் மற்றும் போரினால் ஏற்படும் உளவியல் அதிர்ச்சிகள் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் மனிதவள மேம்பாட்டைப் பல தசாப்தங்கள் பின்னோக்கித் தள்ளி, ஒரு தலைமுறையையே அழிவின் விளிம்புக்கு இட்டுச் சென்றுள்ளது.

சுருங்கக் கூறின், ஈரான் = அமெரிக்கா நேரடி இராணுவ மோதலானது இரு நாடுகளுக்கு இடையிலான ஒரு பிராந்தியப் போர் என்பதைத் தாண்டி, 21ஆம் நூற்றாண்டின் ஒட்டுமொத்த சர்வதேச ஒழுங்கமைப்பையே உலுக்கியுள்ள ஒரு உலகளாவிய பேரழிவாகும். இப்போரின் விளைவுகளைத் தொகுத்துப்

பார்க்கும்போது, நவீன உலகம் எவ்வளவு தூரம் ஒன்றிலொன்று தங்கியுள்ளது என்பதும், ஒரு புள்ளியில் ஏற்படும் உடைவு ஒட்டுமொத்தச் சங்கிலியையும் எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதும் தெளிவாகப் புலனாகின்றது. இப்போரின் தாக்கங்களை வெறும் தற்காலிகப் பாதிப்புகளாகக் கடந்துவிட முடியாது. அவை உலக அமைப்பில் பொருளாதார ரீதியாக, புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு ரீதியாக, மானிடவியல் ரீதியாக நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்த மோதலுக்கு இராணுவப் பலப்பிரயோகம் என்பது ஒருபோதும் தீர்வாக அமையப் போவதில்லை; மாறாக, ஒட்டுமொத்த உலகையும் ஒரு நீண்டகாலப் பொருளாதார மந்தநிலைக்கும் மீளாப் பேரழிவுக்கும் மட்டுமே இட்டுச் செல்லும்.

எனவே, தற்போதைய சமகாலச் சூழலில் வளைகுடா நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தீவிர மத்தியஸ்த முயற்சிகள் மூலம் எட்டப்படும் கூட்டு இராஜதந்திர உடன்படிக்கைகளும், தடையற்ற வர்த்தகப் பாதைகளின் மீள் உருவாக்கமும் மட்டுமே உலகளாவிய இஸ்திரத்தன்மையையும், சர்வதேச அமைதியையும் மீண்டும் நிலைநிறுத்துவதற்கான ஒரே வழியாகும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# இலங்கையில் அதிகரிக்கும் எச்.ஐ.வி. தொற்று!

## ஆண்களிடையே அதிக பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 15

**இலங்கையில் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்குள்ளான புதிய நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருவதாகப் பாலியல் நோய்கள் தொடர்பான சமூக விசேட மருத்துவ நிபுணர் சத்யா ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த 2023ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப்பகுதியில் உள்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது. இவர்களில் பெண்களை விட ஆண்களிடையே இந்தத் தொற்று மிக அதிகமாகக் காணப்படுவது புதிய அவதானிப்பாகும். பாதுகாப்பற்ற உடலுறவு எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கான மிக முதன்மையான காரணமாகக் காணப்படுகின்றது.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் ஒரே ஊசி மற்றும் பிற உபகரணங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் தொற்று வேகமாகப் பரவுகிறது. தொற்றுக்குள்ளான நபர் தனது வாழ்நாள் முழுவதும் நீண்ட கால மருத்துவ சிகிச்சைகளையும், தேவையான மருந்துகளையும் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும்.

மக்கள் தொகை அதிகமாகக் காணப்படும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை மையமாகக் கொண்டு, பாலியல் ரீதியாகப் பரவும் நோய்களைக் கண்டறிவதற்காக விசேட நடமாடும் மருத்துவ முகாம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முன்னெப்பொழுதும் இல்லாதவாறு புதிய நோயாளர்களின் சேர்க்கை வருடாந்தம் அதிகரித்து வருவதால், பொது மக்கள் பாதுகாப்பான சுகாதார நடத்தைகளைப் பேணவேண்டும் - என்றார்.

(ச-இ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 | | 13 |
| 01 | | 07 |
| 1946 | | 2026 |



## அமரர் கிருஷ்ணர் குலேந்திரராசா

"சீனாப்புலம்", நெல்லியடி வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசந்தம் பொலிகண்டி கிழக்கு பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குலேந்திரராசா அவர்கள் நேற்று முன்தினம் (13.07.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பாமிலா (ஆசிரியை, பொலிகண்டி இ.த.க. பாடசாலை, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தாட்சாயணி (அவுஸ்திரேலியா), கீதாஞ்சலி (கனடா), கிருபாஎினி ( மருந்தாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சன் (கணேசன் ஹாட்வெயர்) பிலிப் மெல்வின் (கணக்காளர், அவுஸ்திரோலியா), சுரேஸ்குமார் (கனடா), Dr. சயந்தன் (குழந்தைகள் சத்திர சிகிச்சை நிபுணர் - யாழ் போதனா வைத்தியசாலை, சத்திர சிகிச்சை சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ் பல்கலைக் கழகம்), அன்பு மாமனாரும் மகேந்திரராசா ( ஓய்வு பெற்ற அதிபர் -அருணோதயாக் கல்லாரி) யோகேந்திரராசா (கனடா), அருந்தவராணி, சிவரூபராணி (கொழும்பு), புவனேந்திரம் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. பரஞ்சோதி, பாலசோதி, பத்மசோதி (ஓய்வு பெற்ற, மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), பாஸ்கரசோதி காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், சிவராஜசிங்கம் மற்றும் சிறிஸ்கந்தராசா, கோகிலா - மகேந்திரன் (எழுத்தாளர்), கிருஸ்ணகுமாரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), ரமணி (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.பிரவீணன் (பேராசிரியர், அவுஸ்திரேலியா), வைகுந்தன் (பொறியியலாளர், கனடா), செந்தூரன் (வடிவமைப்பு பொறியியலாளர்), Dr.கஜன் (யாழ் மருத்துவ பீடம் ), சர்மிலன் (மாணவன், ஊவா பல்கலைக் கழகம்), வித்தகி (மருத்துவ பீடம், ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம்), கிஷோர் (கனடா), கீர்த்திகா (கனடா), Dr. நவனீதன் (VOG அவுஸ்திரேலியா ) Dr. சௌதாமினி (அவுஸ்திரேலியா), பூங்கோதை (ஆசிரியை) ஆகியோரின் பெரிய தந்தையும், சுவர்ணாங்கி, சுஜீவன் (மென்பொருள், பொறியிலாளர்), கௌசிகா (லண்டன்), சங்கவி (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), சுபராஜ், அனுராஜ், பிரதீபராஜ், அபிராமி, வருண் ( பணிப்பாளர் prime pare) ஆகியோரின் மாமனாரும், அட்சயன், ஆருகன், ஜொனதன், ஹரிஷ், ஜெய்ஷன் சாள்ஸ், கைலாஷ், அனீஸ், லக்ஸ்மிகா, சதுர்வினி, சங்கர்ஷன், நயனபாஷினி, ஹரினிஸ், அதிதேவ், மித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2026) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வசந்தம் பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
0779000399, 0772487222

# உயர்தர மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி



யாழ்ப்பாணம்,ஜூலை 15

வரணி மத்திய கல்லூரியின் உயர் தரப்பிரிவில் கல்வி பயிலும் புதுமுக மாணவர்களுக்கான விசேட தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சிநெறி, கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

"ஒழுக்கத்தின் ஊடான தலைமைத்துவம்" என்ற மகுட வாசகத்தின் கீழ், செயற்பாடு சார்ந்த கற்றல் முறையியலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பயிற்சிநெறி திட்டமிடப்பட்டிருந்தது. கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி, நேற்றுமுன்தினம் இறுதிநாள் அமர்வுடன் நிறைவடைந்தது. (க)



# டெங்கு விழிப்புணர்வு

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரச திணைக்களங்களில், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் மற்றும் நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வை மேற்கொண்டனர்.

(க-100)

# INVITATION FOR BID 2026/10
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha,Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**,To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.

   **"Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-07-15 To 2026-07-30 during 09:00 hrs and 15:00 hrs
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated intable below.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026-07-15 To 2026-07-30 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-07-22 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2026-07-31 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(13)/ 4/Council / 05/2026/15 | Completing work of Head office Building, Vali East Pradeshiya Sabha | 9.01 | 91 | C8, C7 & C6 (Building) | 4,000.00 | 91,000.00 | 13.11.2026 | 77 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.
15/07/2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விசர்நோய் தடுப்பூசி ஏற்றல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர் 1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒரு நாய்க் கான உரிமம் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும்.

இன்று புதன்கிழமை மு.ப.9.மணி மு.ப.11மணி முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை, மு.ப.11மணி பி.ப.1மணி வரை மீனாட்சி அம்மன் கோவிலடி, பி.ப.2.30மணி பி.ப.4மணி வரை நமசி வாயம் பாடசாலை முன்பாக நாளை வியாழக்கிழமை மு.ப.9மணி மு.ப.11மணி வரை கூழாவடி வைரவர் கோவிலடி, மு.ப.11மணி பி.ப.1மணி வரை சிறாம்பியடி சனசமூக நிலையம், பி.ப.2.30மணி பி.ப.4மணி வரை பலாலி வீதி 2ஆம் ஒழுங்கை நாளைமறுதினம் வெள்ளக்கிழமை மு.ப.9மணி மு.ப.11மணி வரை யாழ் வீதி, மு.ப.11மணி பி.ப.1மணி வரை பெருமாள் கோவிலடி, பி.ப.2.30மணி பி.ப.4.மணி வரை கண்ணாதிட்டி காளி கோவிலடி 18ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9மணி மு.ப.11மணி வரை நடமாடும் சேவை 20ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9மணி மு.ப.11மணி வரை சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை, மு.ப.11மணி பி.ப.1மணி வரை கீரிப்பிள்ளையார் கோவிலடி, பி.ப.2.30மணி பி.ப.4மணி வரை மாவடி வீதி 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9மணி மு.ப.11மணி வரை பிரப்பங்குளம் வீதி, மு.ப.11மணி பி.ப.1மணி வரை பி.ஏ.தம்பி லேன், பி.ப.2.30மணி பி.ப.4மணி வரை கில்னர் வீதி போன்ற இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படும் என யாழ்.மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள் ளார். (ச-41)



# செல்வபுரம் இணைப்புப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 15

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் வேலைத்திட்டத்தின் கீழ், சிறுபாலங்களை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டத்தில், புலோப்பளை செல்வ புரம் இணைப்புப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பாலத்தின் புனர மைப்புப் பணிகளை ஆரம்பித்துவைத்தார். (சு-25)

## நிர்வாகத்தெரிவு

மன்னார்,ஜூலை 15

மன்னார் மாவட்ட சமுர்த்தி தொழிற்சங் கத்தின் நடப்பு வருடத்துக்கான புதிய நிர் வாகம் கடந்த ஞாயிற்றுக் கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தலைவராக ஏ.சி.அஸ் லிம், செயலாளராக ரன்பக், பொருளா ளராக லிங்கேஸ், உப தலைவராக ராஜு ஜெபஸ்தியார், உப செயலாளராக முஜா ஹித் ஆகியோரும், செயற்குழு உறுப்பி னர்களாக ஜலான்,மகேஸ்வரன், முஜிப் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ள னர். (சு-60)

## ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 15

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூ கம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு, கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல் லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலை மையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி.செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணி யம் கலந்துகொள்வார். (சு-66)

## கிஷோரின்...

வெளியிடப்பட்ட வர்த்தமானி ஊடாகத் தன்னை உப தவிசாளர் மற்றும் சபை யின் உறுப்புரிமையிலிருந்து நீக்கிய தற்கு எதிராகக் கிஷோர் கடந்த 04.07. 2026 அன்று வழக்குத் தாக்கல் செய்தி ருந்தார். இவ்வழக்கில் கடந்த 06.07. 2026 அன்று நடைபெற்ற முதற்கட்ட விசாரணையின் போது, ஆளுநரின் இந்தத் தீர்மானத்திற்கு இடைக்காலத் தடை விதிக்க நீதிபதி மறுத்திருந்தார். மற்றைய தரப்பினரின் வாதங்களைக் கேட்டே முடிவை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்து எதிர்மனுதாரர்களுக்கு அறி வித்தல் அனுப்ப ஆணையிட்டிருந்தார்.

இந்த நிலையில் கிஷோர் தாக்கல் செய் திருந்த மனு, மேல் நீதிமன்ற நீதிபதி க.சதீஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரரின் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் தமது சமர்ப்பணங் களை முன்வைத்தார்.

'சாவகச்சேரி நகராட்சி மன்ற விவகாரம் குறித்து விசாரணை நடத்திய அதிகாரி க.அரியநாயகம் முழுச் சபையையுமே கலைக்குமாறுதான் பரிந்துரைத்திருந் தார் . அப்படியிருக்க, ஆளுநர் முழுச் சபையையும் கலைக்காமல் கிஷோரை மட்டும் குறிவைத்து நீக்கியது தவறு. கிஷோருக்கு எதிராக எந்தவொரு நிதி மோசடி அல்லது ஊழல் குற்றச்சாட்டு களும் கிடையாது. 2010 ஆம் ஆண் டுக்கு முன்னர் போர்க்காலத்தில் கட்டப் பட்டு, இணக்கச் சான்றிதழ் பெறப்படாத வணிகக் கட்டடங்களால் சாவகச்சேரி வர்த்தகர்கள் கடுமையாகப் பாதிக்கப்படு வர் என்பதால், அவர்களின் வாழ்வாதா ரத்தைக் காக்கவே இணக்கச் சான்றித ழைக் கட்டாயப்படுத்த வேண்டாம் என நகராட்சி மன்றக் கூட்டத்தில் கிஷோர் குரல் கொடுத்தார் . மக்கள் பிரதிநிதி ஒரு வருக்கு நகராட்சி மன்றக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கருத்து ரிமையைப் பயன்படுத்திப் பேசியதற்கா கப் பதவி நீக்கம் செய்தமை, அப்பட்ட மான 'ஜனநாயகப் படுகொலை' என்பது டன் உள்ளூராட்சி அதிகாரத்தில் ஆளுந ரின் தேவையற்ற தலையீடாகும்' எனவும் மனுதாரரின் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் தமது சமர்ப்பணத்தில் விளக்கினார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிர்மனுதாரர்கள் தரப்பில் சட்டத்தரணி கள் யாரும் முன்னிலையாகவில்லை. இதனை அடுத்து, இவ்வழக்குத் தொடர் பில் எதிர்மனுதாரர்களான வட மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் தனிநபர் விசாரணை அதிகாரி ஆகியோருக்கு ஏதேனும் ஆட்சேபனை கள் இருப்பின், அவற்றை வரும் ஜூலை 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என நீதிபதி க.சதீஸ்வரன் காலக்கெடு விதித்து உத்தரவு பிறப்பித் துள்ளார். (அ-26)

## மாணவர்களுக்குள்...

லில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்ப வம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது.

குறித்த தினத்தன்று இரு மாணவர் குழுக் களுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டினை யடுத்து, ஒரு குழுவினர் இன்னொரு வகுப்புக்குள் புகுந்து அங்கிருந்த மாண வர்களை இரும்புக்கம்பிகளால் தாக்கி யுள்ளனர். பாடசாலை நேரத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் இரு மாணவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவம னையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து தாக்குதலை நடத்திய சந்தேகநபர்களான மூன்று மாணவர்க ளையும் கைது செய்த பொலிஸார் அவர் களை முல்லைத்தீவு நீதவான் நீதிமன் றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தின. இதன்போது சந்தேகநபர்கள் மூவரை யும் எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாணவர்கள் மத்தியில் தற்போது அதிக ரித்து வரும் ஆபத்தான போதைப்பொ ருள்பாவனையும், அதன்பின்னணியில் உருவான குழு மோதலுமே இந்த விபரீ தத் தாக்குதலுக்கு முதன்மைக் காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ-19)

## மூதாட்டியின்...

தங்கச்சங்கிலியை திருடர்கள் அறுத் தெடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ்ப் பாணம், கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்துக்கல்லூரிக்குச் சமீபமாக உள்ள தேவாலயத்துக்கு அருகே நடந்துள்ளது. குறித்த மூதாட்டி இன்னொருவர் செலுத்திய மோட்டார் சைக்கிளின் பின் பக்கத்தில் அமர்ந்து வந்து கொண்டிருந்த போது, இலக்கத்தகடற்ற மோட்டார் சைக் கிளில் அவர்களைப் பின் தொடர்ந்து வந்த இருவர் திடீரெனச் சங்கிலியை அறுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்து சென்றனர். சங்கிலியை அறுத் துக்கொண்டு சென்ற இருவரும் தங்கள் முகத்தை மறைக்கும் வகையிலான முகக் கவசத்தை அணிந்திருந்தனர் என சம்ப வத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்த னர். இந்தச் சம்பவம் குறித்து யாழ்ப்பா ணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-26)

## பொய்!...

சினை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள தாக சமூக ஊடகங்களில் பரவி வரும் தக வல்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

" பிரான்ஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான ராஜதந்திர ரீதியிலான பேச்சுகளைத் தொடர்ந்து ஜனாதிபதியின் விஜயத்துக்கான திகதி கள் நிர்ணயிக்கப்படும். சமூக ஊடகங்க ளில் பகிரப்படும் பதிவுகள் எப்போதும் நம்பகமானவை அல்ல. இவ்வாறான பதிவுகளை யார் உருவாக்குகிறார்கள் மற் றும் பகிர்கிறார்கள் என்பதை ஆராய்ந்தே அவற்றை நம்ப வேண்டும்" இவ்வாறு அமைச்சரை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ-இ)

## புதிய...

திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஆறு தமிழ் பேசும் கட்சிக ளின் ஒன்றிணைவு தொடர்பில் கேள்வி கள் எழுப்பப்பட்டன. குறிப்பாக இதன் பின்னணியில் அரசாங்கம் உள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"எதிரணிகளின் ஒற்றுமை பற்றி எதிர்க் கட்சி தலைவரிடம்தான் கேட்க வேண் டும். ஏனெனில் எதிரணிகளை இணைத் துக்கொண்டு பயணிக்க வேண்டியது அவரின் பொறுப்பாகும். ஆளுங்கட்சிக் குள் குழப்பம் என்றால் என்னிடம் கேளுங்கள்.

எங்கள் பக்கம் 159 எம்.பி.க்கள் உள்ள னர். எனவே, புதிய கூட்டணிகளை உரு வாக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது. அதேவேளை, மாகாணச பைத் தேர்தல் தொடர்பில் தமிழ் பேசும் கட்சிகள் முன்வைத்துள்ள கருத்து வர வேற்கத்தக்கது. தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே நாம் இருக்கின்றோம். நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரணி கள் இணைந்து தேர்தல் முறைமை யொன்றை உருவாக்கித் தரவேண்டும்" - என்றார். (அ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

செம்மணி மனிதப் புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் இன்று காலை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

செம்மணி மனிதப்புதைகுழியில் 3ஆம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 32 நாட்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று, கடந்த 23 ஆம் திகதியுடன் அவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே இன்று முதல் மீண்டும் அகழ்வுகள் செம்மணியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

செம்மணி மனிதப்புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகி 09 நாட்கள் நடைபெற்றது. இதில் 19 மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு ஜுன் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, செப்ரெம்பர் 3ஆம் திகதி வரையிலான 45 நாட்கள் நடைபெற்றது. இதன்போது, 221 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில் மூன்றாம் கட்டத்தில் முதலாவது அகழ்வுப்பணி, கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மே 9ஆம் திகதி வரையிலான 12 நாட்கள் இடம்பெற்று, 21 என்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மீண்டும், மூன்றாம் கட்டத்தின் இரண்டாவது அகழ்வுப் பணி கடந்த ஜுன் மாதம் 01ஆம் திகதி ஆரம்பமாகி ஜுன் 23ஆம் திகதி வரையிலான 22 நாட்கள் நடைபெற்ற நிலையில், தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. மூன்றுகட்டங்களாக நடைபெற்ற அகழ்வுப்பணிகளில் இதுவரை மொத்தமாக 412 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 409 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-26-66)

## நீதியை...

'நாங்கள் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறோம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையானது, செம்மணிப்புதைகுழி தொடர்பான சாட்சிகளின் வாக்குமூலங்கள், நீதிமன்றப் பதிவுகள், இராணுவத் தகவல்கள் மற்றும் முந்தைய விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டுதயாரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மிகப்பெரிய மனிதப்புதைகுழித் தளமான செம்மணி, பல தசாப்தங்களாகப் பேரினவாத அரசாங்கங்கள் காட்டி வரும் வேண்டுமென்றே திட்டமிட்ட செயலற்ற தன்மையின் அடையாளமாக மாறியுள்ளது.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தை வெறும் தடயவியல் ஆய்வாக மட்டும் பார்க்காமல், அங்கு அரங்கேற்றப்பட்ட கடத்தல்கள், சட்டவிரோதக் கொலைகள் மற்றும் சர்வதேசக் குற்றங்கள் தொடர்பாகப் புதிய குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான பிரதான ஆதாரமாக இதனைப் பயன்படுத்த வேண்டும்.

செம்மணி மனிதப்புதைகுழியுடன் தொடர்புடைய மிகக் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு இதுவரை எந்தவொரு நடுத்தர அல்லது உயர்நிலை இராணுவத் தளபதியும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவில்லை. மாறாக, குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்தப் பகுதியில் கடமையாற்றிய பல இராணுவ அதிகாரிகள் பின்னாளில் உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர். அவர்களில் இரண்டு அதிகாரிகள் ஹெய்ட்டியில் நடந்த ஐ.நா. அமைதிப்படைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், அங்கும் அவர்கள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளில் தொடர்புபட்டிருந்ததனர்.

கடந்த ஜுன் மாதம் செம்மணிப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, 1998ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்திடம் போதிய தகவல்கள் இல்லை எனக் குறிப்பிட்டுடன், காணாமல் போனவர்களின் குடும்பங்களே குற்றவாளிகளை அடையாளம் காட்ட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

செம்மணியில் நடந்த கொடூரங்கள் குறித்து விசாரணைகளை நடத்தி வழக்குகளைத் தொடர்வதற்கான முதற்கட்ட ஆதாரங்கள் ஏற்கனவே முழுமையாக உள்ளன. விசாரணையைத் தொடங்கத் தவறுவது ஆதாரங்கள் இல்லாததால் அல்ல, மாறாக அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் குறைபாட்டினாலேயே .

சர்வதேசச் சட்டத்தின்படி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பது குறித்தோ அல்லது அவர்கள் இருக்கும் இடம் குறித்தோ கண்டறியப்படும் வரை, அது ஒரு தொடர்ச்சியான மனித உரிமை மீறலாகவே கருதப்படும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வெறும் மனித எச்சங்களை மீட்டுத் தருவது மட்டும் தீர்வாகாது; இதற்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து சுதந்திரமான முறையில் நீதியை நிலைநாட்டுவதே முறையான பரிகாரமாகும் - என்றார். (அ-இ)

## எதிர்வரும்...

நகரசபை மண்டபத்தில் இடம்பெறுமென வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளராகப் பதவி வகித்த ஞானப்பிரகாசம் கிஷோர் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய முன்னாள் உப தவிசாளரின் உறுப்புரிமை கடந்த ஜுன் மாதம் 24 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெறிதாக்கப்பட்டது.

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். (அ-66)

## கூட்டணியல்ல;...

ஏது கூட்டணியல்ல, குட்டிச்சுவர்' - என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழாவுக்கு வருகை தந்த அமைச்சரிடம், தமிழ் முஸ்லிம் கட்சிகளின் புதிய கூட்டணி தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டணி என்பது, வெறும் கூட்டுச் சாம்பாராக மாறும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை .

இந்தக் கூட்டணி இந்த நாட்டில் லஞ்சத்தை ஒழிப்பதற்கானதா?, மோசடிகளை ஒழிப்பதற்கானதா திருடர்களைப் பிடிப்பதற்கானதா?, நல்ல வேலைகளைச் செய்வதற்கானதா? அல்லது திருடர்களைப் பாதுகாப்பதற்கும், வஞ்சகர்களைப் பாதுகாப்பதற்கும், ஊழல் மோசடிகளை செய்பவர்களை பாதுகாப்பதற்குமான கூட்டணியா என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இந்தக் கூட்டணியில் இருப்பவர்கள் அநேகமானோர் கடந்த காலங்களில் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இப்போது பிணையில் வெளியே வந்தவர்கள் தான். அவ்வாறு பிணையில் இருப்பவர்கள் நாளைக்கு கம்பி எண்ணவேண்டிய வரலாம்.

அதனால், சிறைக்குச் செல்வதற்கு முன்னர் எதையாவது செய்து இந்த அரசாங்கத்தை வீழ்த்தலாமா, அல்லது அரசாங்கத்தை மாற்றலாமா என்கிற முயற்சியில் ஈடுபடுகின்ற ஒரு போக்காகவே இந்தக் கூட்டணியைக் கருதவேண்டும்.

ஆனாலும் எத்தனை கூட்டணி வந்தாலும் தேசிய மக்கள் சக்தியை அசைக்க முடியாது.

ஏனென்றால், இன்றும் அவர்கள் கட்சிகளோடுதான் கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் மக்களோடு கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (அ-26)

## பூநகரியில்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவருடன் பயணித்த மற்றொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி, பள்ளிக்குடாச் சந்திப் பகுதியில் கடந்த ஞாயிறு இரவு 10 மணியளவில் இந்தக்கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

பூநகரியைச் சேர்ந்த கனகரத்தினம் வினுயன் என்ற இளைஞரே இதன் போது உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் ஏ-32 வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக எதிரே வந்த பேருந்துடன் அதிவேகமாக மோதி விபத்துக்குள்ளாகினர்.

இந்த விபத்தின் போது தூக்கி வீசப்பட்ட கனகரத்தினம் வினுயன் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அவரது நண்பரை மீட்ட பொதுமக்கள், உடனடியாக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்துப் பூநகரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். (அ-55)

## ஒரு...

ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோருக்குமிடையே அண்மையில் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இந்தக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இச்சந்திப்பின்போது, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள 54 கடைகளை அகற்றுமாறும், அங்கு நீண்டகாலமாக முடக்கப்பட்டுள்ள மணித்தூண் உள்ளிட்ட திருப்பணிகளுக்கு உடனடியாக அனுமதி வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வலியுறுத்தினார். அத்துடன், குச்சவெளி பிரதேசத்தில் வெறும் 37 கிலோமீற்றர் தூரத்திற்குள் 42 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளமைக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கும் உள்ள தொடர்பு குறித்துக் கேள்வி எழுப்பிய அவர், போரதீவுப்பற்று மற்றும் வாழைச்சேனை பிரதேச சபைகளுக்கு எதிராகத் தொல்லியல் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளை உடனடியாக வாபஸ் பெறுமாறும் கேட்டுக்கொண்டார்.

மறுபுறம், தொல்லியல் திணைக்களத்தின் தற்போதைய இலச்சினையில் ஒரேயொரு மதத்தின் அடையாளம் மட்டுமே பிரதிபலிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், நாட்டின் பல்லினத் தன்மையை மதித்து அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்த இலச்சினையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை போன்ற வழிபாட்டுத் தலங்களில் தமிழ் மக்கள் தங்களது வழிபாட்டு உரிமைகளைத் தடையின்றிப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும், நீதிமன்ற உத்தரவுகளை மீறித் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இதன் போது சுட்டிக்காட்டினர். (அ-இ)

## வீடுகளில்...

ளோரின் வீடுகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகரிலுள்ள வீடொன்றில் 1600 கனேடிய டொலர், ஒரு சோடி காப்பு, கடவுச்சீட்டு என்பனவும், மற்றொரு வீட்டில் 400 யூரோ, இலட்சம் ரூபா இலங்கைப் பணம் என்பனவும் களவாடப்பட்டன.

இதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியிருந்தனர்.

விசாரணைக்கமைய காரைநகரைச் சேர்ந்த 26 மற்றும் 27 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேநபர்களிடமிருந்து களவாடப்பட்ட பணம், நகை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# 'அரவணன்' சிகிச்சை மையம் தெல்லிப்பழையில் திறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 15
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 'அரவணன்' நோய்த் தடுப்புச் சிகிச்சை நிலையம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு மனிதாபிமான சேவைகளில் ஈடுபட்டு வரும் பாலம் அமைப்பின் ('Paalam' the Bridge to Humanity, Australia) சுமார்03 கோடி ரூபா நிதி அனுசரணையுடன் முதற்கட்டமாக குறித்த நவீனச் சிகிச்சை மற்றும் பராமரிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் தேவைகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நிலையம் உயர்தர மருத்துவ வசதிகளையும், மனிதநேயப் பராமரிப்பையும் ஒருங்கிணைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. குறித்த நோய்த் தடுப்புச் சிகிச்சை நிலையத்தை இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவக்கலாநிதி. ஸ்ரீபவானந்தராஜா, பாலம் அமைப்பின் பிரதிநிதிகள், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், சிவில்சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த நோய்த் தடுப்புச் சிகிச்சை நிலையம் இறுதிக் கட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தங்களின் வாழ்வின் இறுதிக் காலத்தை வலி குறைந்த, அமைதியான மற்றும் கண்ணியமான சூழலில் கழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மருத்துவ சிகிச்சையுடன் மட்டுமல்லாமல் உளவியல் ஆலோசனை, உணர்வுபூர்வ ஆதரவு, குடும்ப உறுப்பினர்களுக்கான வழிகாட்டல் உள்ளிட்ட முழுமையான சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் இந்த மையம் செயற்படவுள்ளது. (அ-66)

# மந்திகையில் உயரும் டெங்கு நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டும், டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட மூவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.
கடந்த ஜூன் மாதம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 28 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். இந்த மாதத்தில் நேற்று முன்தினம் வரை 15 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள், கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்தவர்களே அதிகம் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-80)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து வெறும் 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள, தளபாடங்களுடன் கூடிய அழகிய வீடு வாடகைக்கு உள்ளது. இதில் ஏ.சி. வசதியுடன் 5 அறைகள், பணியாளர் குளியலறை உட்பட மொத்தம் 5 குளியலறைகள் மற்றும் ரூஃப் டெரஸ் வசதி ஆகியவை உள்ளன.
தொடர்புகளுக்கு:- 076 828 2112
(CS/61879) J-1

## TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
விசேட செயலமர்வு - 2026

- 18, 19, 20July 2026 - தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- 21, 22, 23 July 2026 - பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- 24, 25, 26 July 2026 - ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம் (07)

"காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.15 மணிவரை"
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346
(cr.051) (N-1)

# கூட்டுறவுதின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 104 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ப. கேசவதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன், கௌரவ விருந்தினராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்கு பிராந்திய முகாமையாளர் எஸ். சிவதரன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் கூட்டுறவுப் பணியாளர்கள் கௌரவிப்பு இடம்பெறும். (க)

# மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பைரதத் திருவிழாவும், 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா வும் இடம்பெறும். (க-25)

## சமையலறை உதவியாளர்கள் தேவை

பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் அமைந்துள்ள எமது காரசாரம் உணவகத்திற்கு சமையலறை உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0776063377, 0777211181
Kaarasaaram Restaurant & Inn Pointpedro Road, Neervely, Jaffna T.P/Whatsapp: +94 75 252 1121
(cs.61875)

## சமையலாளர் தேவை

வீட்டு சமையல் செய்யக்கூடிய சமையலாளர் ஒருவர் தேவை.
யாழ் நகரை அண்மித்தவர்கள்.
தொடர்பு: 0777 17 22 17

## காணி விற்பனைக்கு

யாழ் மருத்துவ பீடத்திற்கு முன்பாகவுள்ள கருவப்புலம் லேனில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 662 4387
077 162 9385
(CS 321521A)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
முகாமையாளர், கணக்காளர், ஊழியர்கள்.
T.P:0777 111 025, 077 9398 876
(CS 321361A)

## காணி விற்பனைக்கு

சிவப்பிரகாசம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 075 262 0586
(CS/61873) J-1

## வேலையாட்கள் தேவை

**வெங்கடேஸ்வரா அக்ரோ இண்டஸ்ட்ரி லிமிடெட்**
நிறுவனத்தின் யாழ்ப்பாண தொழிற்சாலைக்காக அனுபவமிக்க, பொறுப்புணர்வு மிக்க மற்றும் திறமையான வேலையாட்களை பணியமர்த்த விரும்புகிறோம்.

### ஸ்டோர்ஸ் முகாமையாளர் (Store Manager) தொழிற்சாலை

தகைமைகள் :
- வணிக நிர்வாகம், பொருள் மேலாண்மை (Stores Management), லாஜிஸ்டிக்ஸ், சப்ளை செயின் (Supply Chain) அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு அல்லது டிப்ளோமா பெற்றிருக்க வேண்டும். (அல்லது)
- உற்பத்தி அல்லது தொழிற்சாலை சூழலில் கிடங்கு / சரக்கு மேலாண்மை மற்றும் மேற்பார்வைப் பணிகளில் 3-5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- வயது: 30-45
- சரக்கு பெறுதல், சேமித்தல், வழங்குதல், இருப்பு கட்டுப்பாடு மற்றும் பதிவுகளை துல்லியமாக பராமரிக்கும் திறன்.
- பணியாளர்களை வழிநடத்தி, தினசரி செயல்பாடுகளை திறம்பட ஒருங்கிணைக்கும் தலைமைத்துவ திறன்.
- Microsoft Office (Word, Excel) மற்றும் ERP/Inventory Management System பயன்பாட்டில் நல்ல அறிவு.
- சுயமாகவும் பொறுப்புடனும் பணியாற்றும் திறன், நேர மேலாண்மை மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக தொடர்புகொள்ளும் திறன்.

### நிர்வாக முகாமையாளர் (Administrative Manager)

தகைமைகள் :
- வணிக நிர்வாகம், முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு அல்லது டிப்ளோமா பெற்றிருக்க வேண்டும். (அல்லது)
- உற்பத்தி அல்லது தொழிற்சாலை சூழலில் நிர்வாகத் துறையில் 3-5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- வயது: 35 – 45
- சிறந்த தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் திறன்.
- Microsoft Office (Word, Excel, PowerPoint) பயன்பாட்டில் நல்ல அறிவு.
- சுயமாகவும் பொறுப்புடன் பல பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ளும் திறன்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக தொடர்புகொள்ளும் திறன்.

### விண்ணப்பிக்கும் முறை

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது CV-ஐ கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
மின்னஞ்சல். info@venkadeshwara.com
தொலைபேசி : +94 21 223 2460
(Cr 61867 ) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.